மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலைய வெளியீடு—23

உ

திருவானைக்கா

அகிலாண்ட நாயகி மாலை

(குறிப்புரை முதலியவற்றுடன்)

மகாமகோபாத்யாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

அடையாறு] 1961 [சென்னை-20

உ

திருவாவடுதுறை யாதீனத்து
மகாவித்வான்
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்
இயற்றிய

திருவானைக்கா
அகிலாண்ட நாயகி மாலை

(குறிப்புரை முதலியவற்றுடன்)

★

மகாவித்வான் ஸ்ரீ பிள்ளையவர்களின் நினைவு நாளான
12—4—1961 அன்று வந்த வெளியீடு

★

மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
அடையாறு] 1961 [சென்னை-20

விலை 50 நை. பை.

குமரன் அச்சகம், 28, திருப்பள்ளித் தெரு, சென்னை - 1.

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை	...	iv
முகவுரை	...	v
நூல்	...	*1*
செய்யுட்களின் முதற்குறிப்பகராதி	...	*56*

முன்னுரை

திரிசிரபுரம் மகாவித்வான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழகம் கண்ட பெரும் புலவர்களுள் ஒருவர். அவர்களிடம் தமிழ் கற்ற மகாமகோபாத்யாய டாக்டர் ஐயரவர்கள், தம் ஆசிரியர்பால் தாம் கொண்ட அன்பைப் பலமுறைகளில் புலப் படுத்தி யுள்ளார்கள். அப் புலவர் பெருமானின் நினைவை இந் நூல் நிலையம் போற்றுவது கடமையென்று கருதி, ஆண்டுதோறும் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டுமென்றும், அந் நாளில் இயலுமானல், அவர்களியற்றிய பிரபந்தங்களுள் ஒன்றை வெளியிட வேண்டும் என்றும் தீர்மானித்தது. அம் முறையில் இவ் வாண்டு திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்டேசுவரி மாலை என்ற நூல் வெளியிடப் பெறுகின்றது.

இதற்குக் குறிப்புரை முதலியன எழுதி உதவியவர், தமிழ்ப் பேராசிரியரும் இந் நூல் நிலையத்துப் பணியாற்றுபவருமான ஸ்ரீ E. S. வரதராஜய்யர் B.A, அவர்களாவர். அவர்களுக்கும், இதனை அச்சிட்டுதவிய சென்னை, குமரன் அச்சகத்தார்க்கும் நூல் நிலையம் தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

12—4—1961.

திரிசிரபுரம் மகாவித்வான்

மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

இயற்றிய

திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை

முகவுரை

பூமாலைகொண்டு இறைவன் இறைவிகளின் திருமேனியிற் புனைவது போன்று, அன்பர்கள் பாமாலை சூட்டி வழிபடுதலும் நம் தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வந்த பழக்கம். 'தொடுக்கும் கடவுள் பழம்பாடல் கொண்ட', 'கோதை சொல்லும் தூய தமிழ் மாலை', 'பாமாலை கொண்ட திருவெங்கை வாணர்' என்பன காண்க. இதனைச் சில்லறைப் பிரபந்தங்களில் அடக்குவர் ஒரு சாரார். இந்நூல் செல்வ விநாயகர் காப்பு நீங்கலாக நூறு செய்யுட்களைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவது. நூல் முழுவதும் எழுசீர்க்கழி நெடிலாசிரியத்தா லாயது.

இந்நூல் திருவானைக்கா என்னும் தலத்தில் கோயில்கொண்டுள்ள ஸ்ரீ அகிலாண்ட நாயகிமீது பாடப்பெற்ற மாலை என விரியும். இப்பதி கசாரணியம் என்றும் சம்புகேசுரம் என்றும் ஞானகேத்திரம் என்றும் பெயர் பெறும். தலப் பெருமான் பெயர் சம்புநாதர். தேவியார் பெயர் ஸ்ரீ அகிலாண்ட நாயகி. இது சத்தி விசேடத் தலம் என்று கூறப்பெறும். இப்பதி பஞ்சபூதத் தலங்களுள் அப்புத் தலம் என்பர். 'அமுத மென்றதண் புனலினுற்றிரட்டி யமைக்குமச் சிவலிங்க மவ்வியல் பரன்முதலிங்க மென்றுரைத் திடப்படும்' (திருவானைக்காப் புராணம். மூர்த்தி. 7) 'காவிரிவட பால்வரு திருவானைக் காவினில் அப்புலிங்க மதாம்' (தில்லைக். 32) என்பன காண்க. ஏனைய நான்கும் முறையே காஞ்சி, திருவண்ணமலை, காளத்தி, சிதம்பரம் என்ப. இத்தல வரலாற்றைக் கச்சியப்ப முனிவர் தமது திருவானைக்காப் புராணத்தில் விரித்துப் பாடியுள்ளார். தொடக்கத்தில் தேவி மிகவும் உக்கிரமாக இருந்தனள் என்றும், அந்த வேகத்தைத் தணிக்க அன்னுட்கெதிரே ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்கள் ஓர் விநாயகப் பிரதிட்டை செய்ததாகவும் ஓர் வரலாறுண்டு.

தலப்பெருமை

திருமால், அயன், மருத்துவர், உருத்திரன், வசுக்கள், அருக்கன் என்ற இவர்கள் தவம் புரிந்து பேறுபெற்ற தலம். ஓர் சமயம் சிவபெருமான் தேவியைப் பிரிந்து போகத்தமர்ந்த போது, தேவி 'கணநாத ரருகிருந்தோர் பார்த்திருப்ப வெள்ளல் நகை புரிய' அதன் காரணமாக இறைவன் சாபமேற்று அம்பிகை அகிலாண்ட நாயகியாகத் தோன்றி, இத் தலத்து இலிங்கம் அமைத்து வழிபட்டுப் பேறு பெற்றதாகப் புராணம் கூறும். இத் தலம் சிலந்தி பணிந்த நகர் என்ப. ஓர் சிலந்தி தன் வாயினூற் கொண்டு இத் தலத்துக் கோயில் கொண்டுள்ள இறைவனது உருவத் திருமேனிக்குப் பந்தரமைத்து வழிபட்டு வந்தது. அப்பொழுது ஓர் யானை நாடோறும் பொன்னி நதியிலிருந்து நீரைத் தன் துதிக்கையினேற்றுச் சிவபிரான் அருட்குறியை நீராட்டுவது வழக்கம். ஒருநாள் சிலந்தி ஒளிந்திருந்து யானை தானிட்ட நூற்பந்தரைக் குலைக்கக் கண்டு, அதன் புழைக் கையிற் புக, யானை சிலந்தி என்ற இரண்டும் மரித்தன என்றும், யானை கணநாதருள் ஒருவராக ஆனதாகவும், சிலந்தி பிறப்புமாறிச் சுபதேவனுக்கும் அவன் பட்டத்தரசி கமலவதி என்பாளுக்கும் கோச்செங்கட் சோழன் என்ற அரசிளங் குமரனாகத் தோன்றி இறைவற்குப் பல மாடக்கோயில்கள் அமைத்ததாகவும் புராணம் கூறும். 'இருக்கிலங்கு திருமொழி வாயெண்டோ ளீசற்கெழில் மாடமெழுபது செய்துல காண்ட திருக்குலத்து வளச்சோழன்' (பெரியதிரு. 6–6–10) என்றது காண்க. மாடக்கோயில் வாயிலை யானைபுகா வாயில் என்ப. இங்ஙனம் சிலந்தி வழிபட்டதனை 'கற்றகூதனற் சாக்கியன் சிலந்தி கணணப்பன் கணம்புல்ல னென்றிவர்கள், குற்றம் செய்யினும் குணமெனக் கருதும் கொள்கை கண்டு' (தேவா. திருப்புன்கூர். 4) என்ற சுந்தரமூர்த்தி நாயனர் வாக்காலுணர்க.

'மதமாதங்க வனத்து மடமானே வருக வருகவே'
'சிலந்தி பணிந்த நகரில் வளர்செழும் பூங்கொம்பே'

என்று பிள்ளையவர்கள் தமது அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழில் வரைவதும் காண்க. அப்புத் தலம் என்றதற்கேற்ப இத் தலத்துச் சிவபிரான் கருவறையில் அன்றுடம் நீரூற்றைக் காணலாம். நாடோறும் நீரிறைக்கப்படாவிடின் கருவறையிற் புகுந்து சிவகோசரியார் வழிபாடியற்ற வியலாது.

இம்மாலையிற் கற்பனை நயங்களும் சிவபெருமான் புரிந்தருளிய திருவிளையாடல்களைப்பற்றிய பல குறிப்புக்களும், சைவசித்தாந்தக் கருத்துக்களும், தல சம்பந்தமான பற்பல செய்திகளும், தற்குறிப்பேற்றம், வஞ்சப் புகழ்ச்சி முதலிய அணி வகைகளும் பிறவும் காணலாம். இம் மாலை பெற்ற இத் தலத்திற்கு ஐந்து பிராகாரம் உண்டு. அவற்றில் ஐந்தாவது பிரகாரம் திருநீற்று மதில் எனப் பெயர் பெறும். சம்புலிங்கப் பெருமான்,

'அருளிற் சிறந்த திருவேட மல்லாற் றனக்குப் பேருவகை
தருவ திலையென் பது மதுவே பணிக்குத் தகுவ தென்பதுவும்
மருளிற் கலந்தார் களுமறிய வார்செஞ் சடையும் கற்கலையும்
தெருள்கண் மணியும் நீற்றணியும் திகழு முருவத் தொடும்'

எழுந்தருளிப் பல பணியாட்களைக் கொண்டு இம்மதில் அமைத்தனர் என்றும், பணிபுரிந்தார்க்குக் கூலியாகத் திருநீற்றை அள்ளி அளித்ததாகவும், அத் திருநீறே பின்னர்ப் பொன்னாக மாறியதாகவும், அதுபற்றி இம்மதில் திருநீறிட்டான் மதில் எனப் பட்டதாகவும் கூறுவர். மற்றும் இத் தலத்தின் பல பெருமைகளைத் திருவானைக்காப் புராணம் கொண்டுணர்க.

இந் நூலைப்பற்றி இவருடைய மாணவராக ஒருகாலத்துத் திகழ்ந்த டாக்டர் சாமிநாதையர் அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளனர். சிதம்பரம் பிள்ளை யென்னும் கனவான் இவரை நோக்கி ஸ்ரீ அகிலாண்டேசுவரியின்மீது ஒரு மாலை இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அப்பொழுது உடன் சென்றவருள் ஒருவர், 'முன்னமே திருவண்ணாமலையை வலம் வரத் தொடங்கிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஒரு முறை வருவதற்குள் சோணசைல மாலையைப் பாடி முடித்தது போல நீங்கள் சம்புநாதரைத் தரிசனம் செய்து திரும்புவதற்குள் அம் மாலையைச் செய்வதற்கியலுமா' என்று கேட்டார். இவர் நேருமானாற் செய்யலாம் என்று சொல்லிப் பாடி முடித்தார். வெண்ணாவலைப்பற்றியும், திருநீறிட்டான் மதிலைப்பற்றியும், ஆரம் பூண்டான் என்று சம்புநாதர்க்குப் பெயர் வந்த காரணத்தையும் பிறவற்றையும் இம் மாலையில் ஆசிரியர் ஆங்காங்குக் குறிப்பது காணலாம்.

மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் வரலாறு

✲

திரிசிரபுரம் மகாவித்வான் என்றும் பிற்காலக் கம்பர் என்றும் புகழ்பெற்ற மீனுட்சிசுந்தரம் பிள்ளை கணக்காயர் சிதம்பரம் பிள்ளைக்கும் அவர் மனைவி அன்னத்தாச்சிக்கும் அருமகவாக 1815-ல் ஏப்ரல் மாதம் 6-ம் தேதி திருசிரபுரம் ஜில்லா அதவத்தூரில் பிறந்தார். சைவ வேளாள மரபினர். இவர் தந்தையார் தூய சைவ ஒழுக்கம் மேற்கொண்டவர். தமிழ் நூல்களில் நல்ல பயிற்சியுள்ளவர். இங்ஙனம் ஒழுக்கமும் கல்வியும் ஒருசேரத் திகழ்ந்த மரபில் வந்த பிள்ளையவர்கள் இளம்பிராயத்திலேயே கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினர். நினைவாற்றல் இவர்க்கு மிகுதியும் உண்டு. இவர் தமது 16-வது ஆண்டில் காவேரி ஆச்சியை மணம் புரிந்து கொண்டார். இளமையில் சிரபுரம் மௌன மடத்தில் அக்காலத்துத் தங்கியிருந்த திருவாவடுதுறை ஸ்ரீ வேலாயுத முனிவரிடம் இலக்கியங்களும் சமய நூல்களும் கற்றுணர்ந்தார். அறிவுத்தேட்டம் மிகப் பெருக, 'கொங்கெங்கே யெங்கே' என்று நறுமண மலர்களை நாடிச் செல்லும் தேனீ போன்று புலமை சான்ற பலரையும் அடுத்து வழிபட்டு அரிய நூல்கள் பல கற்றுத் தேர்ந்தார். மனைதொறும் ஐயமேற்று வந்த ஓர் பரதேசியுடன் தெருத் தெருவாகச் சென்று பிற்றைநிலை முனியாது நின்று தண்டியலங்காரம் அவரிடம் பாடம் கேட்டனர் என்ப. சில காலம் திருவாவடுதுறை யாதீனத்து, ஆதீனகர்த்தராக விருந்த வேளூர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் தங்கினர். அக்காலத்துத்தான், சிதம்பரம் பிள்ளை என்ற ஓர் கனவானுடைய விருப்பத்தின்படி ஸ்ரீ அகிலாண்டநாயகி மாலை இயற்றினர். இவரை ஆதரித்த லக்ஷ்மண பிள்ளை என்பவருடைய ஆதரவு பெற்று, சென்னைக்குச் சென்று அங்கு பல பெரும் புலவர்களின் நட்புரிமையைப் பெற்றுத் தாம் கற்றிருந்த நூல்களில் தமக்கு ஏற்பட்டிருந்த பல ஐயங்களைப் போக்கிக் கொண்

டார். அங்கிருந்த பொழுதுதான் மழவை மகாலிங்கையர் என்ற புலவர் பெருமான், இவர் இயற்றிய அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழைப் புகழ்ந்து பாராட்டியதென்பர்.

இதன் பின்னர்த் துறைசையாதீனம் சென்று அங்கு ஸ்ரீ அம்பலவாண முனிவரிடம் பல சமய நூல்களும் பிறவும் கற்றதுடன், தாமும் பல மாணவர்கட்குப் பாடம் சொல்லி வந்தார். இவரது தந்தையார் 1840-ல் சிவபதமுற்றார். 1850-ல் இவரது புலமைத்திறம் நன்குணர்ந்த பெரியோர்களும் புலவர் பெருமக்களும் வித்வான் என்ற பட்டம் வழங்கினர். இவரிடம் கற்ற மாணவர் பலராவர். பூவாளூர்த் தியாகராச செட்டியார், சவரிராயலு பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, தேவராச பிள்ளை முதலியோர் அவருள் முக்கியமானவர் என்னலாம். மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் துறைசையாதீனம் சின்னப்பட்டத்திருந்த போது, இப்புலவர் பெருமான், சீகாழிக்கோவை, திருத்தில்லை யமகவந்தாதி, திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களைச் செய்தார். 1854-ல் பல சான்றோர்களும் செல்வந்தர்களும் கூடி இவர்க்கு மகாவித்வான் என்ற பட்டம் அளித்தனர். அப்பொழுது துறைசை ஆதீனத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் ஆவர். 1869-ல் இப்பெரியார் பரிபூரண திசையடைய, மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஆதீனத் தலைவர் ஆனார். விரைவாகவும் இனிமையாகவும் பாடும் ஆற்றலுடையவராதலின் பிள்ளையவர்களையே செய்யுள் இயற்றித் தருமாறு வேண்டிப் பல புலவர்கள் ஆதீனத்தலைவர்பால் பரிசு பெற்றுச் செல்வதுண்டு என்பர். 1871-ம் ஆண்டில்தான் டாக்டர் ஐயரவர்கள் இப்பெரியாரை முதல்முதல் சந்தித்தது. அதிலிருந்து நட்பு வரவரப் பெருகி ஐயரவர்கள் பிள்ளையிடம் பல நூல்கள் பாடம் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தமது புலமைத்திறத்துக்கும் கல்வி நிறைவிற்கும் அப்புலவர் பெருமானே காரணம் என்று ஐயரவர்கள் பிள்ளையவர்களை வாயார வாழ்த்தியுள்ளார். 1876 பிப்ரவரி மாதம் தமது 61-வது ஆண்டில் பிள்ளையவர்கள் சிவபதம் அடைந்தார்.

இப்புலவர் சிகாமணி இயற்றிய புராணங்கள் எழுபதின் மேற்பட்டன. பதிகம், பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை,

யமகவந்தாதி, திரிபந்தாதி, பதிற்றுப் பத்தந்தாதி, மாலை, தூது என்று பல சில்லறைப் பிரபந்தங்களும் இயற்றியுள்ளார். அவைகளில் 44 பிரபந்தங்களை ஐயரவர்கள் பதிப்பித்துள்ள பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டிற் காணலாம்.

பண்பும், புலமையும்

காட்சிக் கெளிமையும், பணிவும் உள்ளவர். உபகார சிந்தை மிகுந்தவர். 'இவருடைய அரிய குணங்களுள் பொறுமை, திருப்தி, தம்மை வியவாமை, பிறர் குற்றம் கூறாமை, பிறரைப் பாராட்டல், இரக்கம், நன்றியறிவு, சிவபக்தி, மாணுக்கர்பாலுள்ள அன்பு முதலியவற்றைச் சிறப்பாகச் சொல்லலாம்' என்று எழுதுவர் டாக்டர் ஐயரவர்கள். இயற்கையாகவே கவித்வசக்தி வாய்ந்தவர். 'சுவையற்ற பாடல்களைச் செய்யும் உலைக்கூடமாக இவர் மனம் இராமல், வளம்பெற்ற செய்யுட்களின் விளைநிலமாகவே இருந்தது 'செய்யுள் இயற்றுவது இவருக்குத் தண்ணீர் பட்டபாடு' என்று ஐயரவர்கள் எழுதுதல் காண்க.

மகாவித்துவான்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை

அவர்கள்

(6-4-1815 — 1-2-1876)

திருவானைக்கா

அகிலாண்டநாயகி மாலை

செல்வ விநாயகர்

திருவளர் கபோல மதப்பெருக் குண்டு
　　தெவிட்டுகார் வண்டின மெழுந்து
மருவளர் செய்ய சாந்தினுண் மறைந்த
　　மத்தக மீதுதங் கிடுதல்
கருவளர் மணிகள் பதித்தபொற் குடத்திற்
　　கவினவீற் றிருந்தருள் கொழிக்கும்
உருவளர் செல்வ விநாயகன் பொற்றா
　　ளுபயபங் கயமுடிக் கணிவாம்.

எல்லா நூல்களும் மங்கலச் சொல்லாற் றொடங்க வேண்டுதலின் திரு என முதற்கண் வைத்தார். வேழத்தின் மும் மதங்களுள் கபோலமதம் இங்குக் கூறப் பெற்றது; கபோலம் - கதுப்பு. மரு - மணம். செய்ய சாந்து - செந்நிறச் சந்தனம். செந்நிறமான சாந்தினால் மறைந்த விநாயகரின் மத்தகத்துக் கரிய வண்டுகள் தங்கியது பொற்குடத்தின்மீது மணிகள் பதிக்கப் பெற்றாற் போன்றிருந்தது. கவின் - அழகு. உபய பங்கயம் - தாமரை போன்ற திருவடியிணை.

நூல்

பூமலி செய்ய பொலிமணித் தோடு
புதுவெயி லெறித்துமுண் மலர்ந்த
தேமலி யாம்பற் செய்யவாய் முளைத்த
சிறுநகை யிளநிலா வெறித்து
மாமலி குழனின் றவர்முக மலர்கண்
வளந்தர முன்புவந் தருள்வாய்
காமலி வானும் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (1)

வடதிசை யவனுஞ் சமழ்ப்புறக் கனகம்
வாய்ந்துதென் றிசைநகத் தமருங்
குடமுனி யவனுஞ் சமழ்ப்புறக் கல்வி
கூர்ந்துமிக் குயர்ந்தவர் பலருந்
தடமலர் புரைநின் முகத்திரு கடைக்கட்
சார்பொருங் குற்றவ ரன்றே
கடவுளர் மனம்புக் கமர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (2)

---

1. பொலிமணித்தோடு - தாடங்கம். வெயில் இங்கு ஒளியைக் குறித்தது. சிறுநகை - புன்முறுவல். மாமலிகுழல் - அண்மைவிளி. நின்றவர் - தேவி திருமுன்பு தரிசித்து நின்றவர். மலர்கண், வினைத்தொகை. முகமலர், கண் என உம்மைத்தொகையாகவும் கொள்ளலாம். கா - சோலை. இச் செய்யுளில் வெயிலும் நிலவும் ஒருங்கே வீசும் புதுமை அம்பிகையிடம் தோன்றுவதாகக் கூறியது நயம்.

2. வடதிசையவன் - குபேரன். சமழ்ப்புற - வெள்க. தென்திசை நகம் - பொதிய மலை. குடமுனி - அகத்தியன். தடம் - பெருமை; குளம். பெருஞ் செல்வரும் நிறைந்த கல்வியாளரும் தேவியின் கடைக்கண் அருளைப் பெற்றவரே என்பது. கடவுளர் - முனிவர்.

விழிவிருந் துதவு நின்றிரு மணத்தில்
விமலனர் கரமலர் மேற்கொண்
டொழிவரு கருங்கன் மிசையுறு நின்று
ளுற்றவென் கரமலர் மேற்கொண்
டிழிவற வடியேன் மனக்கலி னிடத்து
மியைந்துறு மென்றுனைத் துதித்தேன்
கழிநசை முனிவர் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (3)

அடியனேன் கொடிய னென்றுமுன் வருதற்
கஞ்சினை யென்னின்வெங் கூற்ற
மடியமுன் னுதைத்தான் றுணையடைந் தேனும்
வருதிமற் றதுநினக் கரிதோ
நெடியவன் பிரம னிந்திரன் முதலோர்
நித்தமும் தாழ்ந்துசூழ்ந் தேத்திக்
கடியவெவ் வினைதீர்ந் துயர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (4)

---

3. விழி விருந்து உதவும் நின் திருமணம், என்றது அம்பிகையின் திருமணம் தரிசித்தவர்க்கு அளிக்கும் பேரானந்தத்தைக் குறித்தது. விமலன் - சிவபிரான் ; விமலம் - அழுக்கின்மை. திருமணத்தில் இறைவன் தேவியின் தாள்மலரைப் பிடித்து அம்மியில் வைத்தது ; இஃது அம்மி மிதித்தல் என்பர். கல்லானியன்ற அம்மியிற் பொருந்திப் பழகிய பாதம் தன் மனக் கல்லின்மீது இயைதற்குத் தடையென்ன என்று தனது உருகாத மனத்தைக் குறிக்கின்றார் ஆசிரியர். மனத்தைக் கல்லாக உருவகித்தார். 'என்கன்னெஞ்ச முருகவிலையே' (தாயு. 78). கழி - மிகு ; உரிச்சொல்.

4. கூற்றம் - யமன் ; மடிய - இறப்ப. மார்க்கண்டன் பொருட்டுச் சிவபெருமான் இயமனை உதைத்த வரலாறு குறிக்கப்பெற்றது. இவ்வரிய நிகழ்ச்சி திருக்கடவூரில் நிகழ்ந்ததென்ப. ஆசிரியர் தம்மைக் கூற்றுவனிலும் கொடியவனாகக் கூறிக்கொண்டு, தன்பால் உறுதுணையாகப் பரமனை யழைத்து வருமாறு வேண்டுகின்றார். இஃது இருவரையும் ஒருமிக்கத் தரிசிக்க விழைந்தது ஆம்,

பாவிநீ நின்முன் வருவது தகாதென்
பரிசினுக் கென்பையேன் முன்னம்
ஆவிசூழ் மதுரை யகத்துமா பாவி
யாயினு னொருவன்முன் முக்கட்
கோவினே டடைந்த குணத்திநீ யலையோ
குலவது மறந்தனை கொல்லோ
காவியங் கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (5)

பண்டுநீ பெருமா னருள்வழிப் புகலிப்
பாலனுக் களித்தனை ஞான
மண்டுமற் றதனுன் முழுப்புகழ் நினக்கே
யாயதோ விரங்குபு நீயே
தொண்டுகொண் டடியேற் களித்தனை யாயிற்
றாயநிற் கேமுழுப் புகழாங்
கண்டுநேர் மொழியார் பயிறிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (6)

பெருமான் திருமால் முதலியோராற்றினம் வணங்கப் பெறுபவன் என்றார். இராவணனைக் கொன்றதனுல் நேர்ந்த பிரமகத்தி இராமபிரானுன திருமாலுக்கு இங்கே நீங்கியதென்பது புராண வரலாறு.

5. பரிசு - தன்மை. ஆவி - குளம். பெற்ற தாயைப் புணர்ந்து தந்தையைக் கொன்ற ஒரு பிராமணனுக் குற்ற பிரம கத்தி நீங்கப்பெற்ற வரலாறு சோமசுந்தரப் பெருமானுடைய மாபாதகம் தீர்த்த திருவிளையாடலிற் காண்க. முக்கட்கோ - சிவ பெருமான். முக்கண் - சோமன், சூரியன், அக்கினி. குலவு அது - விளங்கிய அச்செயல்; இனி, வது - பெண். இமவான் குலத் துதித்த உத்தமமான பெண்ணரசியுமாம். காவி - நீலமலர்.

6. புகலிப் பாலன் - திருஞான சம்பந்தர். பெருமான் அருள் வழி 'இறையவர்தாம் மலைக் கொடியைப் பார்த்தருளித் துணை முலைகள் பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்தூட்டென்ன' (பெரிய. திருஞான. 66) என்றது. மண்டு ஞானம் - மிக்க ஞானம்; அபர ஞானம், பர ஞானம் என்க. ஆளுடைய பிள்ளையார்க்கு

அளவறு பிழைகள் பொறுத்தருணின்னை
யணியுருப் பாதியில் வைத்தான்
தளர்பிழை மூன்றே பொறுப்பவ டன்னைச்
சடைமுடி வைத்தன னதனுற்
பிளவியன் மதியஞ் சூடிய பெருமான்
பித்தனென் றொருபெயர் பெற்முன்
களமர்மொய் கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (7)

பெரும்புக ழமைந்த நின்பதி யென்னும்
பிரணவ குஞ்சர நின்கை
அரும்புவிற் கரும்பு விரும்புபு கவரு
மடல்புரிந் தென்றுளங் குறித்தோ

ஐயன் ஏவ அளித்தனை; அடியேற்கு நீயாகவே அளிப்பாயாயின் பாதிப் புகழன்றி முழுப் புகழே நினக்காகும் என்றவாறு. கண்டு நேர்மொழி - கற்கண்டையொத்த சொல் (81) இரங்குபு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

7. அணி உரு - அழகிய திருமேனி. உருப்பாதியில் வைத்தான்; அர்த்தநாரீசனுனமையைச் சுட்டியது. பிளவியல் மதியம்-பிறைமதி (பாரத. அருச். தவ. 78). நீரும் முப்பிழை பொறுக்கும் என்ற பழமொழி காண்க. எல்லாப் பிழைகளையும் பொறுக்கும் நினக்குப் பாதியிடமே யளித்து, முப்பிழை பொறுக்கும் நீர் மகளாகிய கங்கையைச் சிரமேற்கொண்டது பித்தன் செயலாகக் கூறப்பட்டது. சிவபெருமானைச் சுந்தரர் பித்தன் எனக்கூறிய வரலாறும் காண்க. கழனி - வயல். மதியம் சூடியும் பித்தனுகவே உள்ளான் என்பது நயம். மதி - புத்தி. தக்கன் சாபம் தவிர்த்து, மதியைச் சிவன் சிரத்திற்சூடியது காண்க. களமர் - உழவர். வஞ்சப்புகழ்ச்சி.

8. பதி - கணவன்; சிவபெருமான். பிரணவ குஞ்சரம் என்றது சிவபிரானை. பிரணவம் ஓம் எனும் ஓரெழுத்தொருமொழி 'ஏகாக்ஷரம்'. குஞ்சரம் - யானை. யானை ஓங்கார வடிவுடையது என்பர். கரும்புவில் - தேவி திருக்கரத்திலே ஏந்துவது. விரும்புபு - விரும்பி. அடல் புரிந்து - வலிமை செய்து. அடல்

வரும்புகர் முகங்கொ ளங்குச பாசம்
வயங்குற வேந்தினை நாளும்
கரும்புய னிறத்தோன் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (8)

யானென தென்னுஞ் செருக்கிழந் தவர்மற்
றிழப்புறூர் நின்னையீ துண்மை
தானென மறைகண் முழங்கவு முணராச்
சழக்கனே னினையிழந் துழல்வேன்
மீனென வயங்குங் கண்ணினுய் கொடியேன்
வினைக்குமோ ரிறுதியுண் டாங்கொல்
கானென வரம்பை சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (9)

புரிந்து கவரும் என மாறுக. புகர் - புள்ளி நிறத்தையுடைய என்றுமாம். அடியார்களின் மலங்களைப் போக்கும் அங்குச பாசமும் அவள் கரத்தேந்துவது. வயங்குற - விளங்க. கரும்புயல் நிறத்தோன் - நீல மேனியனுகிய திருமால். திருவானைக்காவின் அண்மையினில் அத்தலத்தின் மேற்கே வீடணன் பிரதிட்டித்த அரங்கப் பெருமான் உண்மை அறிக. சூழ்தல் - வலம் வந்து வணங்குதல்; உளத்திற் பதித்தலுமாம். அம்பிகையின் திருக்கரங்களில் கரும்பு, அங்குசம், பாசம் ஆகியவற்றை வைத்திருத்தலின் காரணத்தை நயம்பட உரைத்தது காண்க.

9. 'யானென தென்னுஞ் செருக்கறுப்பான், வானோர்க்குயர்ந்த வுலகம் புகும்' (குறள். 346). செருக்கு - உள்ளக் கிளர்ச்சி. ஈதுதான் உண்மை எனக் கூட்டுக. சழக்கன் - தீயவன். 'சழக்கனேனுனைச் சார்ந்திலேன்' (திருவாச. 30, 2). உழல்வேன் - வருந்துவேன். மகளிர் விழிக்குச் சேல் மீன் உவமை. மதுரையிற் கோயில் கொண்டுள்ள தேவிக்கு மீனாக்ஷி என்ற பெயருண்மையும் காண்க. வினை - ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம். இறுதி - முடிவு. அரம்பைகான் எனச் சூழ்தல். அரம்பை - வாழை; ரம்பா என்ற வடசொல் தமிழுக்கேற்ப, அகரம் பெற்று வந்தது. அகங்கார, மமகாரங்களினின்று விடுபட்டவரே தேவியின் அருளுக்குரியர் என்பது கூறப்பெற்றது.

விழியிடந் தப்பி மகவரிந் தூட்டி
விருப்புறு தந்தைதா டடிந்து
பழியகன் மனையை யுதவிமற் றின்னும்
பலசெயற் கரியசெய் தார்க்கே
மொழியுநின் கொழுந னருள்செய்வா னென்னுன்
முடிதரா தென்றுனை யடைந்தேன்
கழியுணர் வுடையார் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (10)

வழிபடு மடிய ராயினுர் தமக்கே
வழங்குதுங் கருணைவே றுய
பழிபடு மவர்க்கு வழங்குரு மென்னின்
பயோதர மருதமு னன்றிப்
பொழிசுவை நறுநீர் புல்லுவர் நிலத்தும்
பொழியுமே புண்ணியப் பொருளே
கழிதலி றென்னங் காத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (11)

---

10. விழியிடந் தப்பியவர், கண்ணப்பர்; 'நாளாறிற் கண்ணிடந் தப்ப வல்லேனல்லன்' (பட்டின. திருத்தில்லை. 3); மகவு அரிந்து ஊட்டியவர், சிறுத்தொண்டர்; 'வாளான் மகவரிந்தூட்ட வல்லேனல்லன்' (பட்டின. திருத்தில்லை. 3); தந்தைதாள் தடிந்தவர், சண்டேசர்; 'வேதியன் தாதைதனைத் தாளிரண்டும் சேதிப்ப' (திருவாச. தோணோக்கம்) மனைவியை இறைவற்குதவியவர், இயற்பகை நாயனுர்; 'இன்புறு தாரந்தன்னை யீசனுக் கன்பரென்றே துன்புரு துதவுந் தொண்டர்' (பெரியபு. இயற்கை. 35). இவர்கள் சரித்திர வரலாறுகளைப் பெரிய புராணத்திற் காண்க. முடிதரா - தரா, துணைவினை. மொழியும் - சிறப்பாகக் கூறப்பெறும். கழி - மிகுதியைக் குறிக்கும் உரிச்சொல். இங்கு சிவபிரான், அம்பிகை இவர்கள் அருள்புரியும் நெறிகள் வேற்றுமைப் படுத்திக் காட்டப்பெற்றன.

11. 'போற்றிப் பணியுமவர்க்கே நீயருள் புரிவது, பழிபடும் பிறர்க்கின்று என்ருல்' மேகம் மருதத்தின் மட்டுமன்றி உவர் நிலத்தும் பெய்வதின்ரு? அதுபோன்று 'உன் இனிய அருள் எனக்

கொடியவ னிவற்கு மருள்புரி யென்றுன்
　　கொழுநனுக் கெனக்குறித் துணர்த்த
முடிவிலின் னருளா லெண்ணினை யேலம்
　　முதல்வனின் னூடலை யுணர்த்த
வடிபணி பொழுதி லுணர்த்திடல் வேண்டு
　　மதுடன் பலிக்குநீ யறிதி
கடிதலில் கழகஞ் சூழ்திரு வானைக்
　　காவகி லாண்டநா யகியே. (12)

கும் எய்துக,' என்றார் ஆசிரியர் ; 'அறுகுளத் துகுத்தும் அகல் வயிற் பொழிந்தும் உறுநிலத்துதவா துவர்நில மூட்டியும், வரையா மரபின் மாரி' (புறநா. 142). பழிபடுதல் - குற்றம் பொருந்துதல். பயோதரம் - மேகம்; பயம் - நீர்; தரம் - தரிப்பது. மருதம் - நானிலத்துள் ஒன்று; வயலும் வயல்சார்ந்த இடமும். பொழி சுவை நறுநீர் மேகம் உவர்நீரைப் பருகுநீராகச் செய்து வழங்குவது போன்று, தன்னுடைய குற்றங்களையும் களைந்து கருணைகாட்ட வேண்டும் என்பது குறிப்பு. புல் - அற்பமான. கழிதல் இல் - நீங்குதல் இல்லாத. தென்னங்கா - தென்னஞ்சோலை. இனி, பொழி (சுவைநறு) புல்லுவர் நிலத்தும் எனக்கொண்டு, வானம் பார்த்து நிற்கும் பாலைவனத்தினர் என்றும் பொருள் காணலாம்.

12. 'கொடியவன் ஆன அடியேற்குப் பரிந்து கருணை காட்டு மாறு உன் கணவனிடம் சொல்ல நீ நினைந்தால், அதற்குத் தக்க தருணம், தாயே, இறைவன் உனது ஊடலை நீக்க உன் அடியில் வணங்கும்போது ஆகும்' என்று நயம்படக் கூறினர். 'அருளது சத்தியாகும்' (சித்தி. 238.) ஆதலின் முடிவில், 'இன் அருள்' என்றார். முதல்வன் - மூவர்க்கு முதல்வன். ஊடல் - தலைவன் தலைவியர்களின் கூட்டத்தில் நிகழும் பிணக்கு. 'ஊடுதல் காமத்துக்கின்பம்' என்பர். (குறள் 1330.). பலிக்கும் - காரிய சித்தியாகும். கழகம் - புலவர் கூடும் இடம்: இச்சொல் பண்டைக் காலத்துச் சூதாடுமிடத்தையே குறித்தது. 'பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும், கழகத்துக் காலை புகின்' (குறள். 937); ஆயினும், கம்பநாடர் காலத்திலேயே நூல் பயிலிடமாகக் கொள்ளப்பெற்றது) 'கந்தனை யனையவர் கலைதெரி கழகம்'. (கம்ப. பால. நாட்டு. 48).

தாவருஞ் சிருக்கு மணிவடஞ் சங்கு
சக்கரஞ் சூற்படை யிலைவே
லோவருஞ் சிறப்பின் வேறுவே றேந்து
முண்மையால் ஒண்மல ரோன்முன்
மூவரு மியற்று மூவகைத் தொழிற்கு
மூலநீ யென்பது தெரிந்தேன்
காவரு மலர்நல் கிடுந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (13)

தாயினைக் கொன்றுந் தந்தையைக் கொன்றுந்
தவலரு மனைவியைக் கொன்றுஞ்
சேயினைக் கொன்றுங் கடும்பினைக் கொன்றுஞ்
சேர்ந்தவர்க் கருள்வனின் கொழுநன்
வீயினைப் பொருவும் பதமடைந் தார்க்கே
விருப்பினீ யருள்வதோர்ந் தடைந்தேன்
காயினைச் சுமந்த பொழிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (14)

---

13. தா அரும் - கெடுதலில்லாத. சிருக்கு - யாகத்தில் ஆகுதி செய்யும் அகப்பை; இதனையுடையவன் பிரமன். மணி வடம், சங்கு, சக்கரம் இவற்றை அணிந்தும் தாங்கியும் நிற்பவன் திருமால்; சூலமும், இலை வடிவான வேலும் தாங்குபவன் சிவ பெருமான். இவை யனைத்தையும் தேவி தாங்கி நிற்பதால் அவளே படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில் களையும் நடத்துபவள் என்றார்; இக்கருத்தின் அருமை ஓரத் தகும். ஓவு அரும் - ஒழிதலில்லாத. மலரோன் - பிரமன். மல ரோன்முன் மூவரும் என்றது பிரமன், திருமால், சிவபெருமான் ஆகியோரைக் குறிக்கும்.

14. தாயினைக் கொன்றவன் - பரசுராமன். சிவபெருமான் இவர்க்குக் காட்சி யளித்துப் பரசு அளித்ததாக வரலாறு (அபிதான...). தந்தையைக் கொன்றவர் - சண்டீசர். சேயினைக் கொன்றவர் - சிறுத்தொண்டர். 'பிதிர் துரோகிணம் வா, சுதத் துரோகிணம் வா' (சிவாநந்தலகிரி). கடும்பு - சுற்றம். வீயினைப் பொருவும் பாதம் - மலர்த்தாள். வீ - மலர். பொருவுதல் - ஒப்

குற்றியை யடைந்த பசும்புலை யுழுநர்
கொடியவன் ஞஞ்சிலென் செயுமப்
பெற்றியி னின்னை யடைந்தநா யேனைப்
பிறையெயிற் றந்தகன் கரத்துப்
பற்றிய தண்டப் படைசெய லென்னே
பரவிய கருணைவா ரிதியே
கற்றிணி மதில்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (15)

முடிமிசை யொருமந் தாகினி வாழ
முதல்வன்வைத் திடுதலிற் சிறந்த
கொடியவ ளென்றி யார்நினைப் பவர்கா
கோதரம் எருக்கெலும் பாதி

பாதல். விருப்பின் - விருப்பத்தோடு. இச்செய்யுளுக்கு ஒப்பு, சுந்தர. திருப்புன்கூர்ப் பதிகம்.

15. 'கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபுல், ஒல்காவே யாகும் உழவர் உழுபடைக்கு' (நாலடி. 178) காண்க, குற்றி - மரக்கட்டை. பூமியில் மண்ணைக் கீழ்மேலாகப் புரட்டுவதால் கொடுமையும், வன்மையும் நாஞ்சிலுக்கு அடையாக்கப் பட்டன. நாஞ்சில் - கலப்பை. குற்றியடைந்த புல்லை உழவரின் கருவி ஒன்றும் செய்தற்கில்லை; அதுபோன்று இறைவனைப் புகல் அடைந்தோரை அந்தகன் யாதும் செய்தற்கில்லை என்றவாறு. பிறை எயிற்றுக்கு, வெண்மையானும் வளைவானும் உவமை. அந்தகன் - உயிர்கட்கு அந்தம் அல்லது முடிவைச் செய்பவன். 'கண்டாயடா அந்தகா வந்துபார் சற்றென் கைக் கெட்டவே' (கந்தரலங்.) கருணை வாரிதி - அருட் கடல். அந்தகனின் கைப்படை, தண்டாயுதம் என்க. கல்திணி - கற்கள் பொருத்திச் செய்யப்பெற்ற.

16. மந்தாகினி - கங்கை நதி, மந்தவாகினி என்றதன் திரிபு; மெதுவாகச் செல்வது என்பது பொருள். 'மந்தாகினி யணி வேணிப் பிரான்' (திருவெங்கைக் கோவை 107). 'இறைவன் சிரத்திடை வைத்தது கொண்டு மிகவும் சிறப்புற்ற கொடி

படிதரு மிடத்திற் சற்றிட முடம்பிற்
பாதியோ விடமருட் டாயே
கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (16)

பெருவள னமைந்த நீருரு வாய
பெருந்தகை நீருரு வாய
ஒருகுல மகளை மலர்மிசைத் தேவு
முணர்தராக் காட்டிடை மறைத்தான்
அருகுநுண் ணிடைநிற் கஞ்சியே யன்றே
லணியுருப் பாதிமற் றிலையோ
கருமுகி றவழு மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (17)

போன்ற பெண் என்று கருதுபவர் யார்? அவளுக்கு அமைந்த இடம் பாம்பும், எருக்கும், எலும்பும் என்ற இழிக்கப்பட்ட பொருள்களின் அருகு அன்றோ? தேவியாகிய நினக்கு அமைந்த இடம் உடம்பிற் பாதியன்றோ! ஆகலின் உன் உயர்வு அவட்கில்லை என்றவாறு. கொடி - உவமவாகு பெயராய்க் கங்கையைக் குறித்தது. என்று யார் - என்றியார், குற்றியலிகரம். ஆதி என்றதால் கொக்கிறகு, பூளை, இண்டை முதலியனவும் கொள்க. படிதரு - தரு. துணைவினை. கடிமலர் - நறுமணப் போதுகள். தடங்கள் - குளங்கள்.

17. நீர் உருவாய பெருந்தகை - திருவானைக்காவிற் கோயில் கொண்டுள்ள சிவபிரான் நீர் வடிவன், பஞ்சபூதங்களில் இஃது அப்புத்தலம். 'அமுதமென்ற தண் புனலினுற்றிரட்டியமைக்குமச் சிவலிங்கமவ்வியல்பான், அமுதலிங்கமென் றுரைத்திடப்படும்' (திருவானைக்காப் புராணம்: மூர்த்தி விசேட. 7) 'நீருருவாயவன் நீருருவாய ஓர் மகளைச் சடைக் காட்டிடை நீ யறியாமல் மறைத்து வைத்தான். வேறு இடத்தில் வைக்க வேண்டும் எனில், நீ அமர்ந்த பெருமான் திருமேனியிற் பாதியல்லாது மற்றைப் பாதி யில்லையோ; இவ்வாறு அவன் செய்ததுனக்கு அஞ்சியே' என்றார். ஏதுத் தற்குறிப்பேற்ற அணி. மலர்மிசைத்தேவும் உணர்தராக் காடு - பெருமான் சடைக் கற்றை. பிரமன் அன்னமாகி இறைவன்

அலையடி யடைந்த வகத்தடி நிலையா
தலையடி யேற்கிரங் குபுபுன்
தலையடி சூட்டிப் பிடியடி யென்பான்
றடியடி விலக்கியா ளிம்ய
மலையடி யுதித்து வளர்ந்துவெண் ணுவன்
மரத்தடி வாழ்பவற் புணர்ந்தாய்
கலையடி யுணர்ந்தார் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (18)

முடி காணச்சென்று வெற்றி பெருதது ; 'புரங்கடந்தான்' எனத் தொடங்கும் திருக்கோவை (86)ச் செய்யுளும் அதன் உரையும் காண்க. அருகும் - சிறுகும். 'நுதலடி நுசுப்பென மூவகைச் சிறுகுதல் உத்தம மகளிரின் இலக்கணம் என்ப'. கருமுகில் தவழு மதில் என்று மதிலின் உயரம் குறித்தபடி.

18. கடலலைகளின் அடியிற் சிக்கிய உளத்துடன். அடி நிலையாது - அடி நிலத்திற் பாவாது. அலை அடியேன் - அலை கின்ற அடியேனுக்கு. அலையடி என்ற சொற்களிற் சிலேடை காண்க. இரங்குபு - இரங்கி. புன்தலை அடி சூட்டி - என்னுடைய இழிந்த தலையில் உன் பொன் அடி பதித்து. பிடி, அடி என்பான் தடி அடி - இயம வாதனை. விலக்கி - நீக்கி. ஆள் - ஆள்வாயாக. இமயமலை யடியிற்றேன்றி, மரத்தடியில் வாழ்தரும் சம்புநாதரைக் கூடினய். இமய அடியில் தோன்றியது ; பர்வதராஜனின் வழியடி யாக அவதரித்தது. வெண் நாவல் மரத்து அடி வாழ்பவர் திருவானைக்காவில் ஜம்பு மர நிழலில் எழுந்தருளிய ஜம்புலிங்கம். இப்பெயர் ஜம்பு என்ற முனிவர் பூஜித்ததால் பெற்ற பெயராகும் எனத் திருவானைக்காப் புராணம் கூறும். கலையடியுணர்ந்தார் - வேதமாதி கலைகளின் ஆழத்தைக் கண்டு தெளிந்தவர். பெருமான் உருவத்திருமேனி கொண்டு வெண்ணுவல் மரத்தடியில் அமர்ந்தது அகிலாண்ட நாயகிக் கருள்செயும் பொருட்டெனப் புராணம் கூறும்.

இருவினைச் சிமிழ்ப்புண் டுழல்கொடி யவன்மற்
　　றிவற்கரு ளென்றிரங் குபுநின்
ஒருமுத லவனுக் குணர்த்துதி வருத்த
　　முன்னலுன் பரிசினுக் கடாது
வருபசுங் குழவிக் குறுபிணி தீர்க்கு
　　மருந்தனை யன்றியார் நுகர்வார்
கருமுகி லுறங்கு மதிற்றிரு வானைக்
　　காவகி லாண்டநா யகியே. (19)

எடுப்பது பிச்சை யேந்துவ தோடாங்
　　கியக்குவ தொற்றையே றரைக்கண்
உடுப்பது புன்றோன் மற்றிவர் மனையா
　　யுற்றநீ யுயிர்வயிற் றழலாய்
அடுப்பது தவிர வூட்டுத லாதி
　　யறமெலாம் வளர்ப்பையீ தழகே
கடுப்பது தவிர்ந்த மதிற்றிரு வானைக்
　　காவகி லாண்டநா யகியே. (20)

---

19. சிமிழ்ப்புண்டு - பிணிக்கப்பட்டு. 'சீருறு சிலம்பி நூலாற் சிமிழ்ப்புண்ட சிங்கம்' (சீவக. 1116). இருவினை - நல்வினை, தீவினை. கொடியவனேனும் அடியேற்கருள் புரியுமாறு பெருமானுக்கு உரைத்தருள்க. (12). வருத்தம் - சொல்லுதலாகிய துன்பம்; சிரமத்தைப் பொருட்படுத்துதல் நன்றன்று என்றவாறு. குழவியின் பிணி தீரும்பொருட்டு மருந்து நுகர்பவள் அன்னையே யன்றோ? கருமுகில் உறங்கு மதில் என்றுமதிலின் உயரம் குறித்தவாறு. (17). முகில் படியும் என்னுது 'உறங்கும் என்றது' என்றும் குறைவில்லாது நின்று நிலவுவது என்பதனைத் தெரிக்க என்க.

20. எடுப்பது பிச்சை, 'பச்சை மேனியர் பிச்சை கொள்பவர்'; 'ஏந்துவது ஓடு', 'பல்லிலோட்டினர் பலிகொண்டுண்பவர்'; இயக்குவதொற்றை யேறு. 'பைங்கணேற்றினர்' (தேவா. பக். 47); 6; 5, 7. உடுப்பது புன்றோல் - 'கொல் புலித்தோல் நல்லாடை' (திருவாச. 257). 'இத்தகைய பெருமானுக்கு இல்லாளாகிய நீ, உயிர்களின் வயிற்றில் பசி அழலாகத் திகழ்வது தவிர்த்து,

முற்றவம் புரிந்து முழுமலந் துமித்த
மோனமெய்ஞ் ஞானிய ரன்றி
மற்றவர் கவரப் படுங்கொனின் கருணை
வானகத் தெழுமதிக் கதிரை
நற்றவம் புரிந்த சகோரமோ கொடிய
நவில்கருங் காகமோ கவரும்
கற்றவர் புகழ்ந்து சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (21)

தொண்டவாய் மனமா திகளொருங் குய்க்குந்
தூயவ ரன்றிமற் றேரும்
அண்டரா தியரு மணுகரு நின்று
ளடைவரோ வளவறு மேன்மை

அவற்றிற்கு இனிது உணவு ஊட்டும் அறம் முதலியவற்றை மேற்கொண்டாய். இது நின் அருட் சிறப்பையே காட்டும் என்றபடி. இருநாழி நெற்கொண்டுலகுயிரனைத்தும் ஊட்டுபவள் பிராட்டியாகலின் இங்ஙனம் கூறினர் என்க. கடுப்பது - ஒப்பது. தன்னிகரற்ற மதில், எ-று. இறைவனே சிவனடியார் வேடம் பூண்டு கட்டுவித்தது திருநீற்று மதில் என்ற வரலாறு காண்க.

21. முன் தவம் - முற்றவம். துமித்தல் - நீக்குதல். மோனம் - மௌனம். 'சிறந்த தவமாற்றி ஆணவம், கன்மம் மாயையாதி மலங்களையொழித்தவர்தாம் உனது அருட்குப் பாத்திரமாகுவர்; என்னைப் போன்றவர்கள் அதனை யெய்தக்கூடுமோ? சந்திரனுடைய கிரணங்களைச் சகோரப் புள்ளேயன்றி, கருங்காகம் பருகக் கூடுமா?' கூடாது என்பது பொருள். சகோரம் - இதனை நிலா முக்கிப் புள் என்பர். 'பானிலவைப் பசுங்கதிர்க் கொத்தொடு, மேனிலாவுஞ் சகோரங்கண்மேயவே' (நக்க. 605). கவரும் - ஏற்கும். அருளை நிலவாகவும், ஞானியரைச் சகோரமாகவும் காட்டிய உவமையின் சிறப்பு ஓர்ந்து மகிழ்தற்குரியது.

22. தொண்டு அவாய் - வழிபாட்டினை விரும்பி. மனமாதிகள் ஒருங்குய்க்கும் தூயவர், மெய்ஞ்ஞானியர்; ஒப்பு: 'மனம் மொழி காயமென்ன வகுத்திடு கரணமூன்றும் கனம் விளர்ப்பெனக் கறுத்த கண்ணன்றனடிக்கேயாக்கி' (குசேலோ.). அண்டர் - தேவர்

கொண்டவான் கங்கை யடைவதோ திமமோ
குரண்டமோ குணப்பெருங் குன்றே
கண்டவர் பவங்கா ணுத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (22)

இடையறு வன்பின் மெய்கொடு துதிப்பா
ரின்றுதி முன்னர்மெய்ந் நிழல்போல்
புடையறு வினையேன் பொய்கொடு துதிக்கும்
புன்றுதி யெங்ஙன மென்னில்
நடையறுத் தேமாங் குயிற்குர லெதிரோ
ரரிட்டமுங் கதறுதல் பொருவும்
கடையறு மருதஞ் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (23)

'அண்டரே தேவர் ஆயர்' (பிங்கலம்). அணுக அரு - அணுகரு எனத் தொகுத்தது. முக்கரணங்களும் தூய்மையானவர் அன்றிப் பிறர் நின் அருள் பெறற்கருகராகார்; புனிதமான கங்கையை நாடியடைவது அன்னமேயன்றி, நீர்க்காக்கையன்று; அது போன்று என்க. வான் கங்கை - சிறந்த கங்கை நதி; ஆகாய கங்கையுமாம். ஓதிமம் - அன்னம். குரண்டம் - நீர்க்காக்கை; கொக்குமாம். திருவானைக்காவைக் காணப்பெற்றவர் பிறப்பு நீங்கப் பெறுவர் என்பது குறிப்பு.

23. மாணிக்கவாசகராதி உண்மையன்பு பூண்ட அடியார்களின் துதிமுன்பாக வினைவயப்பட்ட தன் துதிப்பாக்கள் குயிலின் இனிய குரலுக்கெதிராகக் காகம் கரைவது போலாம் என்றார். மெய்ந்நிழல் போலும்; செய்தவினை இடைவிடாமல் வினைதொடரும் என்பதனை, 'நிழல் தன்னை வீயாதடியுறைந்தற்று' (குறள். 208) என்ற உவமையால் காண்க. புடை - பக்கம்; ஒப்பு: 'நீளத்திரிந் துழன்றாய் நீங்கா நிழல் போல' (தனிப்பா). பொய்கொடு - பொய்யாகிய. பெரும்பாலும் மாமரத்தில் வதிவதாதலின் மாங்குயில் என்றார். 'மாமரம்தான் தீப்பட்டு வேகுதோ, தியாகேசர் நன்

மறைபல துதிக்கு நின்பெரும் புகழை
வழுத்திய வான்றவர் நாவும்
அறையுமோ மற்றைப் புல்லிய தெய்வந்
தமைபுக ழுறையுமே லினிமை
நிறைதரு கருப்பஞ் சாறவா வியநா
நிம்பநெ யவாவுதல் போலும்
கறையறு வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (24)

மனைதொறு மிரப்புத் தொழில்கொடு புகுவார்
மறலித னுலயம் புகுவார்
நினைதர முடியாக் கருக்குழி பலவு
நிரம்புற வோடுபு புகுவார்
இனையவர் புகாநின் றிருப்பெருங் கோயி
லேழையேன் புகவருள் புரிவாய்
கனைகடல் வாவி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (25)

னுட்டில் கூப்பிட்ட தேயக் குயில்' (தனிப்பா). அரிட்டம் - காக்கை. கடையரு - முடிவில்லாத. குயில் குரல் என்றும் அரிட்டம் கதறுதல் என்றும் அமைத்ததன் நயம் ஓர்க.

24. ஈசுவரியின் புகழை வழுத்தும் அறிவிற் சிறந்தவர் பிற தெய்வங்களை வழுத்தார் என்றபடி. அவ்வாறு செய்தல் கருப்பஞ் சாற்றினை விடுத்து வேப்பெண்ணெயைச் சுவைத்தல்போலும் என்றார். இதனுல் ஆசிரியர் மறந்தும் புறந்தொழா மாந்தரின் மரபினர் என்பதுணரலாம். நிம்பம் - வேம்பு. கறை - குற்றம்.

25. 'இரப்புத் தொழில் கொடுமனைதொறும் புகுவார்' என்றியைக்க. மறலி - இயமன். கருக்குழி - பிறவிப் பள்ளம். ஓடுபு - ஓடி, செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். கனை கடல் - ஒலிக்கின்ற கடல், வினைத்தொகை. கடல்போல் நீர்ப் பெருக்குள்ள வாவி என்க. வாவி - குளம்.

எண்ணருங் கொடிய பாதகம் பலவு மியற்றுமா
　　பாவியா னெனினும்
நண்ணரு நினது திருவரு டோயி னண்ணுத
　　லரிதுகொல் புனிதம்
பண்ணருங் கொலைசெய் வாளும்பொன் னுமே பரிசன
　　வேதிதீண் டுதலால்
கண்ணருங் கழனி சூழ்திரு வானைக் காவகி
　　லாண்டநா யகியே. (26)

முழுவதுங் குணமே நாடின்முற் றுது முகுந்தனு
　　தியரிடத் தினுநீ
பழுதற வுணர்த்தா விடினுணர் வாரோ பரமனைப்
　　பண்டவர் புரிதோம்
எழுதரி தவரு மின்னரே லம்ம வென்செயல்
　　யாதெனப் புகல்கேன்
கழுவிய மணியிற் சூழ்திரு வானைக் காவகி
　　லாண்டநா யகியே. (27)

---

26. தான் மாபாவி எனினும் தன்னைத் தேவியின் திருவருள் புனிதமாக்கக்கூடும் என்கின்றார். எதுபோல் என்னில் கொலை புரியும் வாளும் பரிசன வேதியாற் பொன்னாக மாறும் என்னும் கருத்துப் பற்றி. பண் அரும் - செய்தற்கு அரிய. பண்ண அரும் எண்ண அரும் என்பன, பண்ணரும் எண்ணரும் எனத் தொகுத்தன. புனிதம் - தூய்மை. வேதி - மட்ட உலோகங்களைப் பொன் னாக்குவது; இரசவாதம் என்பர். ஒப்பு : 'முதல்வன் அருளைக் கால் இன்புறு வேதகத்திரும்பு பொன்னானாற்போல் (பெரியபு. கண்ணப்ப. 154).

27. எல்லா நற்பண்புகளும் அமைந்திருத்தல் வேண்டும் நின் அருள் பெற எனின் அஃது இயலாத காரியம். திருமால் முதலானவர்கள் கூட நீயுணர்த்தித்தான் பிரமஞானம் பெறுவர் எ-று. தோம் - குற்றம். அம்ம, வியப்பிடைச்சொல். அவரும் - அம்முகுந்தனாதியரும் இத்தன்மை யுடையவரானால். எழுத அரிது - எழுதரிது எனத் தொக்கது. கழுவிய மணி - தூய இரத்தினம்.

உலகிடை யழுத பிள்ளைபால் குடிக்கு முண்மையென்
றுரைப்பதற் கேற்ப
இலகுசீ காழி மழவழ வளித்தா யின்முலைப்
பாலழா விடினும்
அலகற விரங்கி யளிப்பவ ரிலையோ வத்தகு
மழவியா னருள்வாய்
கலகமில் கழகஞ் சூழ்திரு வானைக் காவகி
லாண்டநா யகியே. (28)

அழுமழ வொன்றற் களித்தனன் றீம்பா லம்பலத்
தாடிய பெருமான்
பழுதற நீயு மளித்தனை தீம்பால் பசித்தழு
மிளமழ வொன்றற்
கெழுதரு மிவற்று ளினக்குறு புகழ்போ லெம்பிராற்
குண்டுகொ லியம்பாய்
கழுமணிச் சிகரி பொலிதிரு வானைக் காவகி
லாண்டநா யகியே. (29)

---

28. சீகாழிப் பிரம தீர்த்தக் கரையில் திருஞான சம்பந்தர்க்குத் தேவி பாலூட்டியது இங்குக் குறிக்கப்பெற்றது, இது பெரிய புராணங் கொண்டறிக. 'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்பது பழமொழி. தான் அழாவிடினும், 'பாணினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்தூட்டுதல்' (திருவாசகம் 542) சாலச் சிறப் புடைத்து என்கின்றார் ஆசிரியர்.

29. அம்பலத்தாடும் பெருமான் தீம்பால் அளித்தது உபமன்யு முனிவருக்கு. 'பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட, கோலச் சடையற்கே யுந்தீ பற'. (திருவாசகம் திருவுந்தி. 17) அம்பலத்தாடிய பெருமான் - படைத்தலாதி ஐந்தொழில் மேற் கொண்டு ஆடும் நடராசப் பெருமான்—தீம்பால் - இனிய பால். கழுமணிச் சிகரி - தூய்மை செய்யப்பட்ட மணி போன்ற கோபுரம். ஞானசம்பந்தர் தேவாரம் பாடிய சிறப்புப்பற்றி ஏற்றம் கூறியதாம்.

இடையறு வன்பு பெருக்கிநீ பூசை யியற்றிட
வினிதுள முவந்து
சடையறு முடியோ னுறைதரப் பெற்ற தண்ணிழ
லுவலந் தருவோ
புடையறு தமர ருறைதரப் பெற்ற பொலந்தரு
வோசிறந் ததுகட்
கடையறுக் கருணை யாய்திரு வானைக் காவகி
லாண்டநா யகியே. (30)

சிறுபிறைக் கொழுந்து வீற்றிருத் தலினற்
றேவதே வன்றிரு முடிமேல்
மறுவிலச் சுவடு பொலிதரு மைய
மருவுறு தலைதுமற் றெவர்க்கும்
உறுமறைக் கரிய நின்னடி யகத்து
மொளிருமச் சுவடுகா ரணமென்
கறுவொழித் துரைப்பாய் புகழ்த்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (31)

---

30. தேவர்கள் வசிக்கப்பெற்ற கற்பகத் தருவினைக்காட்டிலும் தேவர்க்கும் தேவனான இறைவன் ஜம்புநாதப் பெருமான் தேவி வழிபாடாற்ற விரும்பியமரும் நாவல் மரம் சிறந்தது என்றபடி. தண் நிழல் - குளிர்ந்த நிழல். அமரர் - தேவர். பொலம் தரு - அழகிய விருக்ஷம். நாவல் மரம் தல விருக்ஷம். இறைவன், யோகத்திருந்த சம்பு முனிவர் தமக்கு அளித்த நாவற்கனியைத் தின்று விதையை உமிழ்ந்தாராக. அவ் விதையை முனிவர் தின்றார் என்றும் அவ்விதையே நாவல் மரமாயதென்றும் தல வரலாறு கூறும். உறைதர - தர துணை வினை. கட்கடை - கடைக்கண். புடை - பக்கம்.

31. 'பிறை மதிச் சுவடு இறைவன் திருமுடி மீது காணப் பெறும். ஆயினும் அதே சுவடு தேவியாகிய உனது அடி மீதும் காணப்பெறுவதென்' என்று அம்பிகையை நோக்கி வினவு கின்றார் ஆசிரியர். ஊடற் காலத்து இறைவன் முடி, தேவி தாளிற் படும்படி வணங்கியபோது, அதே பிறைச் சுவடு. அவள் திருவடிக் கண்ணும் படிந்தது என்பது குறிப்பு. மறுவில் - குற்ற மற்ற. கறு - சினம்.

எதிர்மலர் தொடுத்த மாரவே ளுடல
மெரிக்குண வாக்கிய பெருமான்
அதிர்வரு மெய்யிற் பாதிநீ கவர்ந்தா
யமைதர முழுவதுங் கவர்ந்தால்
உதிர்தலி னினது திறமையா ருணர்வா
ரோங்கவன் வியாப்பியப் படலால்
கதிர்படு மிதுவே யருடிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (32)

தவவலி யுடையோர் பலரையு மயக்கிச்
சடைமுடி யோனெதிர் மயங்கி
இவருமம் மயக்காற் புணர்ந்தொரு மகவு
மீன்றமான் மோகினி தனித்துப்

32. எதிர்மலர் தொடுத்த - தனக்கு மாறாக நின்று மலரம்புகளை விடுத்த. மாரவேள் - மன்மதன். இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. எரிக்கு உணவாக்கிய - எரித்த. இறைவன் திரு மேனியில் பாதியே நீ உனதாக்கிக் கொண்டாய். எங்கும் வியாபித்துள்ள அவன் திருமேனியை முழுதும் நீ கவர்ந்தால் உன் திறமை யாரே புகழ முடியும். 'தான் தனக்குச் சொம்பாதி யன்மைக்கனைத்தும் தன்மயமெனும் சுருதிகரியா வைத்தும்' (குமரகுரு. முத்துக்குமார. செங்கீரை 2), என்ற வரிகளும் 'சர்வம் சக்திமயம் ஜகத்' என்ற வுரையும் இங்குக் காணத்தகுவன. காமத்தை வளர்க்கும் மன்மதனை எரித்த பரமன் மேனியிலேயே நீ இடங்கொண்டாய் என்று தேவி திறமை கூறினர். (ஒப்பு.) 'அரவகல் அல்குலார்பால் ஆசை நீத்தவற்கே, வீடு தருவமென்றளவில் வேதம் சாற்றியதலைவன் றன்னைப் பரவை பாற்றூது விடுத்தார் சுந்தரர் (திருவிளை. கடவுள் வாழ்த்து 21) என்றது காண்க. உதிர்தல் இல் - சிதறுதலில்லாத.

33. தவத்தினர் யாவரையும் மதிமயங்கச் செய்து சிவபிரானிடம் மயங்கி நின்றது திருமால் உருக்கொண்ட மோகினி. அவளும் நீ பெருமான் உடலிற் பாதியாக அமைந்தது கண்டு நாணிக் கானகத்துப் புகுந்தாள் என்றபடி. சிவனுக்கும் மோகினி வடிவுகொண்ட திருமாலுக்கும் உண்டான மகவினைச் சாத்தனர் என்றும் ஐயனர் என்றும் கூறுவர். பவர் படர்ந்த - கொடிகள்

பவர்படர் வனம்புக் குறைதன்மற் றவன்மெய்ப்
பாதிநீ கவர்ந்ததோர்ந் தன்றே
கவலரும் வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (33)

நீயெனப் பெருமான் விரும்பியோர் தினத்து
நிகழ்தரப் பொலிவதும் புவிக்குத்
தாயெனப் படுநீ யவனெனப் பொலியுந்
தன்மையும் வேறலே மென்று
சேயெனப் படுபல் லுயிர்க்கெலா முண்மை
தெரிப்பது போலுமீ தருளே
காயெனப் பவமுற் றகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (34)

பரவுநங் கருணை வான்றவ முடையார்
பாலலாற் புன்மையோர் பாலும்
விரவுமோ வென்னி னெழுபெரு வெள்ளம்
விரிதரு வாரிதி மட்டோ

படர்ந்த. கவல் அரும் - கவலைக்கிடம் சிறிதும் தராத வளமை என்க.

34. சிவம் சத்திதன்னை யீன்றும், சத்திதான் சிவத்தை யீன்றும், உவந்திருவரும் புணர்ந்திங் குலகுயிர் எல்லாம் ஈன்றும்' (சித்தி. 166). என்ற சித்தாந்தக் கருத்து இங்கே காணத்தகும். இவ்வாறான தன்மையால் இருவரும் ஒன்றே, வேறல்லர் என்பது பெறப்படும். தேவி - தாய், சிவபிரான் - தந்தை, உலகுயிர்கள் சேய்கள் என்ப. பவம் - பிறப்பு. இதனைக் காயெனவும், அதனை வேருடன் களைவது சம்புத்தலம் என்றும் குறித்தவாறு.

35. சிறந்த தவத்தினோர்பாலே நின் அருள் விரவும் என்பை யேல், பெருக்கெடுத்து வரும் வெள்ளம் ஆழியில் மட்டும் அன்றி எறும்புப் புற்றிலும் புகுவதில்லையா? ஆகவே எறும்பனை போன்ற என்பாலும் விரவுதல் தகும் என்றார். (11 பார்க்க.) விரவுதல் - கலத்தல். வாரிதி - சமுத்திரம். உரவு நீர் - வலிய புனல், 'ஊரங்கண நீர் உரவு நீர் சேர்ந்தக்கால்'. (நாலடி. 17௨),

உரவுநீ ரூறவி யளையினும் புகுமே
யுவமையில் கோமளக் கொழுந்தே
கரவுதீர் முனிவர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (35)

சடையெனும் வனத்து வாழ்தருங் கங்கை
தனித்துறை வாள்கொலென் றெண்ணி
விடைமிசைப் பெருமா னவளுயிர் வாழ்வான்
மிலைந்தனன் கொன்றையாங் கன்னப்
பெடையன நடையா யனையவன் றனைநீ
பித்தனென் றெண்ணுதல் பிழையே
கடையுறு வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (36)

பரவுறு முலகத் துயிரெலா மீன்று
பருவர லவையுறு தோங்க
உரவுறு கருணை யால்வளர்த் திடுநீ
யொருமலை மகளென வுதித்து

உறவி - வலிமையற்ற எறும்பு. கோமளம் - அழகு. கரவு - வஞ்சகம். இதனால், 'எளியேனாகிய என்னிடமும் கருணை கொள்வாய்' என்பது விண்ணப்பம்.

36. இறைவன் ஒன்றுக்கும் பற்றாத கொன்றையைச் சடைக்கண் அணிந்தது, சடைக்கணுள்ள கங்கையின் தனிமை தவிர்க்கவேயாகும். ஆகவே அவனைப் பித்தன் என்று நீ எண்ணுதல் ஒண்ணாது. விடை - இடபம். மிலைதல் - சூடுதல். கடை உறு வளமை - எல்லையில்லாத செழிப்பு. ஆற்றருகில் கொன்றை வளர்வதனை இங்குக் குறித்தார் என்க. மற்றும் கொன்றை சிவபிரானுக்குகந்ததாராதலின் அதனைக் கங்கை துணைக் கொண்டாள் எனினுமாம்.

37. 'உலகத்துயிரெலாம் ஈன்று அவற்றை இருநாழி நெற்கொண்டு ஊட்டி, அவற்றின் துன்பினை அகற்றும் நீ, மலைமகளாய்த் தோன்றிப் புறவு, கிளி, மயில், பூவை இவைகளைப் போற்றி வளர்த்தது என்?' என வினவுகின்றார். தன் நடை போன்று நடக்கும் புறவாதலாலும், தன் மழலைச் சொற்கள் போன்று பேசுவன

விரவுறு புறவு கிளிமயில் பூவை
    விரும்புபு வளர்த்தவா றென்னே
கரவுறு மவர்கா ணுத்திரு வானைக்
    காவகி லாண்டநா யகியே. (37)

பரிதிவந் துதய மெழுமுறுக் குடையும்
    பங்கய மலர்மிசை யுறைவார்
அரிமறு மார்பு மயன்றிரு நாவு
    மமர்பவ ரென்பர்நின் முகமாம்
விரிமலர்க் கமலத் துறைவரென் றுணரார்
    மேதினி மடமையென் சொல்கேன்
கரிசறு வளமை மலிதிரு வானைக்
    காவகி லாண்டநா யகியே. (38)

விரும்புநின் செங்கை தாங்கலா லிரண்டாம்
    வேற்றுமை விரித்துரை செய்யா
தரும்புதா மரைதாங் குவாரென லான்மூன்
    றுவதும் படுசொலும் விரிக்கும்

கிளியும், பூவையுமாதலானும், தன் சாயலை மேற்கொண்டது மயிலாகலானும், பிராட்டி அவற்றைப் பேணி வளர்த்தாள் என்பது குறிப்பு. உரவு - வலிமை. மலைமகள் - பார்வதி. பூவை - நாகணவாய்; மைனு எனவும் வழங்குவர். கரவு - வஞ்சகம். 'களவறிந்தார் நெஞ்சிற் கரவு' (குறள். 288).

38. செந்தாமரையிலும், வெண்டாமரையிலும் முறையே வதியும் திருமகளும், கலைமகளும் அரியின் மார்பிலும், பிரமனுடைய நாவிலும் உறைவர் என்பர். அவர் அறியார்; அவர்கள் இருவோரும் உனது முகமாகிய விரிந்த தாமரை மலர்க்கண்ணன்றோ உறைவர் என்றவாறு. எனவே திருவும் கலையும் நிறைந்து ஒளிர்பவள் தேவி என்க. மேதினி - பூமியிலுள்ளோர்; ஆகுபெயர். மேதி என்ற ஓரசுரன் உடற்கொழுப்பினின்று வந்ததால் மேதினி எனப்பட்டதென்பர். மடமை - அறியாமை. கரிசு - குற்றம்.

39. தாமரை தாங்குவார் என்ற தொடர், தாமரையைத் தாங்குவார் என இரண்டாம் வேற்றுமை விரித்தும், தாமரையாற்

பெரும்புவி மலர்பூ மாதெனும் பெயர்கள்
பெறும்வினைத் தொகைகுணத் தொகைப்பேர்
கரும்புபைங் கமுகிற் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (39)

நந்திய வறியா மையினினைத் துதிப்பே
னுயினே னுயினு மதனுல்
முந்திய வினைமுற் றொழிதரா துறையு
முறைமையென் மறவியி னேனும்
உந்திய வழலைத் தொடிற்சுடா துறுங்கொ
லொழிவருங் கருணைவா ரிதியே
கந்திதென் பொருவப் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே (40)

ருங்கப்படுவார் என்ற மூன்றும் வேற்றுமை உருபு விரித்தும் கொள்ளப்படும். தேவியின் செங்கையைத் தாங்குவார் இவர்கள் இருவரும் என்பது பாடினோர் கருத்து. பெருஞ் சந்நிதானங் களுக்கும் பெருந்தேவியர்க்கும் பிறர் கைலாகு கொடுக்கும் வழக்கம் அறிக. பெரும்புவி விரிக்கும் என இயைக்க. மலர் பூ என்பது மலர்ந்த, மலர்கின்ற, மலரும் பூ என வினைத் தொகை யாகவும், மலராகிய பூ எனப் பண்புத் தொகையாகவும் விரிதல் காண்க; கரும்பு கமுகு போல் 'செந்நெலே கன்னல் காட்டச் சேர்ந் தயற் செறுவில் நின்ற, கன்னலே கமுகு காட்டும்' (வில்லி. பா. நிரை மீட்சி. 106).

40. நந்திய - மிகுந்த. தான் அறியாமற் றுதித்தபோதும் தன் வினை பரமன் அருளால் ஒழிதர வேண்டும் என்றும், மறந்து தீயைத் தீண்டினும் நெருப்புச் சுடாது ஒழியுமோ என்றும் நயம் படக் கூறினர். ஒழி தரா - தரா - துணைவினை. மறவி - மறத்தல். கந்தி - கமுகு. தென் - தென்னை. கமுகு - தென்னை பொன்று ஓங்கும் எனத் தலத்தின் செழிப்பைச் சுட்டினர். (39) பார்க்க.

அங்கையேந் துறுபைங் கிள்ளையின் மொழியோ
        வறுமுகக் குழவிவாய் மொழியோ
சங்கையே குழையாக் கொண்டவ னூட
        றணித்திடப் புகலுமின் மொழியோ
மங்கைநின் செவிக்கு நாயினேன் புன்சொன்
        மற்றுநீ யிரங்கலெவ் வாறோ
கங்கைதாழ் பொன்னி சூழ்திரு வானைக்
        காவகி லாண்டநா யகியே (41)

ஒப்பினின் புகழே கேட்கவென் செவிகண்
        ணோங்குநின் னுருவமே காணத்
தப்பினின் றனையே பாடிட வாய்கை
        தவாதுநின் னடிப்பணி யாற்ற
இப்படி யுறுமேற் செங்கதி ருதய
        மெத்திசை யெழினுமற் றென்னே
கப்பிணர்த் தருக்கள் சூழ்திரு வானைக்
        காவகி லாண்டநா யகியே. (42)

---

41. தேவியை நோக்கி, அடியேன் சொற்கள் உன் கரத்தில் நீ ஏந்தும் கிளியின் மொழியன்று; உன் இளங்குமரனுடைய மழலையு மன்று; உன் ஊடல் தீர்ப்பான் வேண்டி இறைவன் பணிந்து மொழியும் இனிய சொற்களுமல்ல; எனின் நீ அவற்றிற்கு இரங்குவது எப்படி? எனக் கேட்கின்றார். கங்கையும் வணங்கும் பொன்னி என்றது நாட்டுப்பற்று என்க. கங்கையினும் காவிரி உயர்ந்ததெனப்பதைக் கச்சியப்ப முனிவர், 'கங்கை நதி யொரு வேந்த னிரப்ப வொரு முனிவாயிற் கரந்து மாண்டோரங்க மலிதரப் புகுந்த துயரானைக் காவினைச் சூழ்ந்தமரும் பொன்னி, துங்க முனிகமண்டலத்துட்கரந்து விசும்பிறை வேண்டத் துதிக்கை நம்பி யீங்கருள்' (திருவானைக்காப் புராணம். திருநகரச். 3).

42. 'கண்ணவனைக் காண்க விருகாதவனைக் கேட்க வாய், பண்ணவனைப் பாடப் பதஞ் சூழ்க - எண்ணிறைந்த, நெய்யொத்து நின்றானை நீலமிடற் றானையென், கையொத்து நேர் கூப்புக' (பு. வெ. மா. கடவுள் வாழ்த்து.) என்றது காண்க. அப்பரருளிய

ஓதுறு முறைமை யொன்றின்முன் மூன்று
ளொருசிறி யேற்குநின் பதிக்கும்
போதுறு குழனீ நடுப்பொலி தலினாற்
புரிந்துநின் பதியொடு மெனைப்பின்
றீதுறு மிரண்டி னீக்கியொன் றுக்குந்
திறனினக் கன்றியார்க் குளது
காதுறு கண்ணார் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (43)

கோவண மறையாக் கொண்டனன் பெருமான்
கொண்டனை நீயுமே கலையாத்
தூவண வவன்மா தேவன்மா தேவி
துதிக்குநீ யெனிற்றிரு நெடுமா
லேவண வவற்கு நீவியாப் பியமென்
றிசைப்பதெங் ஙனமருட் டாயே
காவண மறுகு மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (44)

'திருவங்க மாலையும் இங்கே காணத்தகும். தவாது - தவறாமல், 'எங்கெழிலென் ஞாயிறெமக்கு' (திருவெம்பாவை. 19) என்ற பழமொழி அறிக. கப்பு இணர் - கிளையும் பூங்கொத்தும். தரு - மரம்.

43. மூன்று - பதி பாசம் பசு - பாசம் ஆணவாதிகள்; மாயையால் வளர்க்கப்படுவன - பின்னர், நல்லது மாயை என்ற சுத்த மாயையே உயிர்களைப் பாசக் கட்டினின்றும் நீக்கும் என்ற சித்தாந்தக் கருத்து இங்கே குறிக்கப்பட்டது. 'நல்லது மாயை தானும் நானெனன வந்து நிற்கும்' (தாயு. தேன்முகம். 6). பசுத் தன்மையும் என்க. 'உடையாளுன்றன் நடுவிருக்க வுடையா ளடுவுள் நீ யிருத்தி, அடியேனடுவில் இருவீரும் இருப்பதானால்' (திருவாச. 376) என்றபாசுரத்தை இச்செய்யுள் நினைப்பூட்டுகின்றது. காதுறு கண்ணார்—செவியளவும் பரந்து செல்லும் விழிகளையுடைய மடவார். ஒன்றுக்குதல் - தாடலை முத்தி என்ப.

44. மறையைப் பெருமான் கோவணமாகவும், தேவியின் மேகலையாகவும் கூறுவது மரபு. காவணம் - பந்தல். மறுகு - வீதி. காவணம் மலி மறுகு என்க. சிவபெருமானுக்கு அரவம் 'கர

பொறியரி தொடரு மருமலர்த் தாளோன்
பொலியனந் தொடர்சடா முடியோன்
அறியுநின் கொழுநன் பொறியரி தொடரு
மலர்க்குழ லினைநடை யன்னம்
செறிதரத் தொடர்மென் பதத்தினை யெனினீ
தேவொடு மாறுளாய் கொல்லோ
கறிபயி லளிசூழ் பொழிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (45)

திருந்துறு தந்தை யாகிய வரையைத்
திரிபுர மெரித்தநாட் குழைத்த
பெருந்திற லுணர்ந்தம் மலையுள மகிழப்
பெருந்தகை நிறமுலைக் கோட்டால்
பொருந்துறக் குழைத்தாய் போலுநின் றிறமை
புகலுதற் கடங்குமோ தாயே
கருந்துழாய் மார்பன் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (46)

மருவு பொற் றொடியாம், காலிற் கழலாம், பொருவில் புயவலய மாகும்—அரவரைமேல் நாணும் அரற்கு நகைமணிசேர் தாழ் குழையாம், பூணும் புனைமாலையாம்.' (தனிப்பா.) 'மறைக் கோவணத்தான் மறைச் சிலம்பான். (கச்சி வண்டுவிடு தூது).

45. பிரமன் ஓர் அன்னமாகிப் பரமன் சடாமுடியைத் தொடர்ந்தான். ஆனால் அன்னப் பறவை உன் தாளைத் தொடர்கின்றது. ஆகவே பரமனுடன் நீ மாறு கொண்டனை போலும் என்கின்றார். பொறி - புள்ளி; அரி - திருமால், வண்டு. பதம் - பாதம். கறி - மிளகு.

46. தேவியை நோக்கி, 'உன் தந்தை பர்வத ராஜன். அவனைத் திரிபுரம் அழிக்கச் செல்லும் கால் பரமன் வில்லாக்கினான். தந்தைக்குப் பரிந்து, அவ்வாறு வளைத்த ஆற்றல் சான்ற பரமனுடைய மார்பினை நின் முலைக்கோட்டால் உழக்கினை. உன் திறமை என்னே!' என்று புகழ்கின்றார். இங்ஙனம் தன் அருமை மகள் செய்தது இவள் தந்தையாகிய மலையரசற்கு மகிழ்வைத் தந்தது என்று கூறுமுகத்தால் அவன் தன் மகள்மரு மகனுடைய

மறைமுதல் பொருவ வேந்தினை நீயு
மலர்புரை தருகையில் வன்னி
உறைதரு மனையா னிறமுநின் னிறமு
மொத்தன வாயினு மவன
தறைதரு மெழுநா வதுநின தொருநா
வதுசெவி யவாமொழி யதுதான்
கறையற வெதுநீ புகறிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (47)

குடகட லொடுங்கு மிரவிதண் மதியங்
குணகட லுதிக்குமென் றுரைக்கும்
படவர வேந்து முலகநின் னொருகைப்
பங்கயத் தொடுங்குநின் கொழுநன்
தடமலர் வதனத் துதிக்குமென் றுணராத்
தன்மையென் மென்மைசான் மயிலே
கடவுளர் பலருஞ் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (48)

இன்ப வாழ்க்கையைக் கண்டு மகிழ்ந்தான் என்று நயம்பட உரைத்தார், குழைத்தல் - வளைத்தல்; கலத்தல்.

47. மறை முதல் - சிவபெருமான். வன்னி - அக்கினி. அனையான் நிறமும் நின் நிறமும் - அக்கினியின் நிறமும் நின் நிறமும். 'தாமக்னிவர்ணம்' என்பது துர்க்காஷ்டகம். அக்கினிக்கு எழுநா என்று பெயர். செவி அவாம் மொழி - சுருதி.

48. 'இரவி மேலைக் கடலில் மறையும்; சந்திரன் கீழ்க்கடலில் தோன்றும்' என்று உலகோர் கூறுவர். ஆயினும் உலகம் உன் மலர் போன்ற கையில் ஒடுங்கும் என்றும், உன் கணவனை பரமன் முகப் பங்கயத்தில் தோன்றுமென்றும் உரையார். சூரிய சந்திரர்கள் தேவியின் கைகளிலொடுங்கும் என்பது, (இஃது ஆராயத்தக்கது.) ஒருக்கால் இறைவி தன் இரு கரங்களால் இறைவனுடைய கதிர்மதி யாகிய இரு கண்களையும் பொத்தியதைக் குறித்தல் கூடும். நின் கொழுநன், நின் ஒரு கைப் பங்கயத்து

பெருவழக் கெடுத்துப் பேரவை யேறிப்
பேசுவ குறையறப் பேசி
ஒருதிரு நாவ லூரனை யாண்டா
னேங்குவெண் ணுவலூ ரண்ணல்
அருளொடு நீயு மத்தகு செயலொன்
றுற்றினன் றென்றியா னினைந்தேன்
கருளற வொளியின் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (49)

முதுபுக ழுடைநின் பதியிரு பாத
முழுமலர்க் கருச்சனை யாற்றின்
மதுமல ரொன்று குறையினு மதற்கு
மாறுகண் ணிடந்திடல் வேண்டும்
அதுசெய மாயோ னல்லன்யா னின்பொன்
னடியருச் சனைசெய்வான் புகுந்தேன்
கதுமென வருள்செய் தருடிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (50)

ஒடுங்கும்' என்று, இணைத்துக் கூறலாகும். மென்மை - சாயலின் மென்மை. கடவுளர் - தேவர்.

49. திருமணக் காலத்தில் வழக்குச் செய்து அவையோர் முன்பு தன் கட்சியை யெடுத்துப்பேசிச் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டமை பெரிய புராணம் கொண்டுணர்க. அதுபோன்று தன்னையும், தேவி, வழி வழியாகத் தன் அடிமையென்று வழக்கெடுத்துத் ஆட்கொள்ள வேண்டும் என்பது ஆசிரியரின் முறையீடு. திருநாவலூரன் - சுந்தரமூர்த்தி. வெண்ணுவலூர் அண்ணல் - திருவானைக்காவில் கோயில் கொண்டுள்ள சம்புலிங்கன். கருள் - இருட்டு.

50. இறைவற்கு அருச்சனை யாற்றுங்கால் ஆயிரம் மலர்களில் ஒன்று குறையத் தன் கண்மலர் கொண்டு திருமால் அருச்சனை புரிந்தான்; அச்செயல் அடியேன் நினைக்கவும் ஒண்ணுது; ஆகவே நீ வந்து அருளவேண்டும் என்கின்ருர் ஆசிரியர். திருவீழிமிழலையில் கோயில் கொண்டுள்ள உருவத்திருமேனிக்கு நேத்திரார்ப்பணேசுவரர் என்ற பெயருண்மை காண்க.

தருமமென் றுரைக்கு மளியமர் நின்கைத்
தாமரை மலரின தலர்ச்சி
பெருமதி மலர்ச்சி மாற்றுமென் றுரையார்
பெருமதி யலர்ச்சியே செழித்த
மருமலி கமல மலரின தலர்ச்சி
மாற்றுமென் றுரைப்பரீ தென்னே
கருணையங் கடலே யருட்டிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (51)

நீவிணே தத்தா னின்பதி முகக்க
ணிகழ்கைசேர்த் தெடுத்திடுங் காலம்
ஓவிய மனையாய் கணமுமின் றுனக்கவ்
வும்பரா தியபல வுயிர்க்கும்
மேவிய கோடி யுகம்பல வாமவ்
விநோதநீ யாற்றுத றகாது
காவியங் கண்ணுர் பயிறிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (52)

---

51. சந்திரன் ஒளியில் தாமரை கூம்பிச் சாம்பும் என்பர் அறியாதவர்கள். தேவியின் கரமாகிய தாமரையே, மதியினைக் கூம்பச் செய்யும் என்பது கருத்து. மருமலி - மணம் நிறைந்த. அளி - ஈகை; வண்டும் ஆம். மயக்கவணி.

52. 'நாயகன் கண்ணயப்பால் நாயகி புதைப்ப எங்கும் பாயிருள் பரந்து மூடி' (சித்தி. 1-52) என்ற சிவஞான சித்தியார்ச் செய்யுளும், காஞ்சிப் புராணம் கண்புதைத்த படலமும் இங்கே நினைவு கூரத்தகும். பதி - கணவன்; சிவபெருமான். ஓவியம் - சித்திரம். மானிடரின் ஓராண்டு தேவர்கட்கு ஓர்நாள். இந்தக் கணக்கில் பல யுகங்கள் கழிந்தன என்பர். 'உனக்குக் கணமுமின்று; உம்பராதியர்க்குப் பலகோடி யுகமாம்' என்றியைக்க. மேவிய - பொருந்திய. காவி - நீலமலர்.

தென்னவன் புரிந்த பெருந்தவப் பேற்றாற்
செழுந்தமி லகத்தொரு மகவே
என்னநீ யுதித்த வாஞ்சையுட் குறித்தே
யிறைநுதற் கண்புதை யாது
மன்னமற் றிருகண் புதைத்தனை நின்னை
மதிக்குல மென்பதோர்ந் திலையோ
கன்னவி றோளார் பயிறிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (53)

அரும்புமேர் நின்கைக் கணிபல வணிந்துள்
ளவாவொடு தாங்குமா தர்களை
விரும்புபு சுமக்கு மெல்லிதழ்க் கமல
மெய்த்தவ முடையன வெனவே
இரும்புவி புகன்று லனையமா தர்கட
மிருந்தவப் பெருமையென் புகல்கேன்
கரும்புநேர் மொழியார் பயிறிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (54)

---

53. தென்னவன் - பாண்டியன். மலயத்துவச பாண்டியனுக்குத் தடாதகையாகத் தேவியுதித்த வரலாறு திருவிளையாடற் புராணத்துக் காண்க. தேவி அக்கினியிற் றோன்றினள் என்பது குறிப்பு. அதுகொண்டே பெருமானுடைய நுதற் கண்ணாகிய அக்கினியைப் பொத்தாமல், சூரிய சந்திரர்களாகிய மற்றக் கண்களைப் புதைத்தனள்; எனினும் தேவி மதிக் குலத்தவளல்லளோ அதனைப் புதைத்ததென் என்று நயம்பட வினவுகின்றார். வாஞ்சை - அன்பு. கல் நவில் - கல்லென்று சொல்லத்தக்க. கன்னவில் தோளார் - வீரர்.

54. 'திருமகளும் கலைமகளும் தேவிக்கு ஒப்பனை புரிபவர்கள். அவர்களைத் தாங்குகின்ற செந்தாமரை வெண்தாமரைகள் தவமுடையன என்பர். அவர்கள் நின் அண்மையிலிருந்து உனக்குப் பணிபூட்டி அலங்கரிக்க என்ன தவம் செய்தார்களோ' என்பது கருத்து.

சிலம்பகத் துதித்த நின்னடி தற்சூழ்
சிலம்பகத் துதித்தமா தரைவல்
வலம்பகப் பொலியு முலையினு யங்கை
மலரகத் துதித்தமா தென்ன
வுலம்பகப் பொருதோ ளரன்முடிக் கொளாமை
யுணர்ந்தன்றே யூடலிற் றுக்குங்
கலம்பக முலாமுற் புனைதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (55)

பெரியவர்க் கிடுக்கண் புரிவதை யுணர்ந்து
பெரும்புகழ்த் தந்தைதன் மரபென்
றரியவர் சிந்தை யாலயம் புகுவா
யயர்ந்துமெண் ணுமல்வண் குறிஞ்சிக்
குரியவன் கரத்துப் புகூஉக்குரு குப்பே
றொருவரை கொன்றனை யழகே
கரியவன் பிரமன் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (56)

---

55. சிலம்பு - மலை ; சிலம்பகத் துதித்தவள் - மலைமகளாகிய தேவி. சிலம்பு - காலணி. தேவி காற் சிலம்பில் ஒன்பது கன்னிகள் தோன்றிய வரலாறு இந்தப் புராணத்துக் காண்க. தேவி காலில் உதித்ததால் அம்மாதரை விடுத்து அவள் கரத்தினின்று தோன்றிய கங்கையைச் சிரமேற்கொண்டான் சிவபெருமான் என்று பிராட்டி ஊடினதாகக் குறிக்கின்றார். பெருமானுடைய திருக்கண்களை உமாதேவியார் பொத்தியபோது அவள் கரத்தின் வழியாகப் பெருகிய வெள்ளமே கங்கை என்ற வரலாறு காண்க. வல் - சூதாடு கருவி. இதனை முலைக்குவமை கூறுவது மரபு. (வருணகுல. மடல்) வல்லின் வலம்பக என்க. வலம்பக - வன்மையற. உலம் - கல், - திருவானைக்கா உலா : காளமேகப் புலவர் பாடியது. கலம்பக முலா முன் புனைதரும் என்றதால் இத்தலத்திற்கு ஓர் கலம்பகம் முன்பு இருந்தது போலும்.

56. இடுக்கண் - துன்பம். தந்தைதன் மரபு - சைலாதி மரபின் வந்த சந்தானசாரியர். சிந்தை ஆலயம் - மனக்கோயில். குறிஞ்சிக்குரியவன் - முருகவேள் 'சேயோன் மேய மை வரையுலகம்'

நினையுணர் மகடாய் மரபென வொருமா
னெடுங்கையேந் தினன்பெம்மா னம்மான்
தனையுணர் மகன்றாய் மரபெனக் கிள்ளை
தன்னைநின் கையிலேந் தினையால்
வினையுண ரார்சொன் னீயுநின் பதியும்
விரும்புறு மாடலென் னுரைக்கேன்
கனையுண ரளிசூழ் பொழிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (57)

பொலிதரப் பசந்து நீர்மழை யெங்கும்
பொழியுமே புயலது போல
மலிதரப் பசந்து நீயும்வண் கருணை
மழைபொழி குவைகொடு வினையான்
மெலிதர லுற்ற வென்னையொழித் திடுவான்
விதியெவன் விமலமெய்ச் சுடரே
கலிதரு துயர்சா ராத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (58)

(தொல். அகத். 5) 'குறிஞ்சிக்கிழவனென்றேதும் குவலயமே' (கந்தரலங்.) அவன் கரத்தால் பிளந்தது கிரௌஞ்சகிரி. கரியவன் - திருமால். குருகுப் பெயர்க்குன்றத்தைப் பிளந்தது சக்தி வேலாகலின் 'குறிஞ்சிக்குரியவன் கரத்துப்புகூஉக் கொன்றனை' என்றார். மலை அம்பிகையின் தந்தை மரபாகலின் இங்ஙனம் கூறினர் என்க.

57, பெம்மான் ஏந்தியது மான்; தேவி ஏந்தியது கிள்ளை. கிள்ளை - கிளி. இப்பாட்டில் அடங்கிய வரலாறு வல்லார்பால் கேட்டறிக.

58. மேகம் கறுத்து நீரை எங்கும் பொழியும்; அதுபோன்று நீயும் நின் மேனி பசந்து அருள் மழை (எங்கும்) பொழிவாய், 'அறுநிலத்துகுத்தும், அகன்வயற்பெய்தும், உறுநிலத்தோவாது வர் நிலம் ஊட்டியும் வரையா மரபின் மாரி என்ப (புறநா. 142) ஆகவே உன் அருள்மாரிக்கு அடியேன் விலக்கா? என வினவுகின்றார். 'முன்னிக் கடலைச் சுருக்கி' (திருவெம்பாவை 11) பாசுரம் நோக்குக. விதி எவன் - விதி யாது? விமலம் - மலமின்மை,

நறையிலா மலரோ நயமிலா மொழியோ
நயனமில் லாதவண் முகமோ
பொறையிலாத் தவமோ மகவிலா மனையோ
புனலிலா வோடையோ நீதி
முறையிலா வரசோ மதியிலா விரவோ
மூடனேன் பத்தியில் பாடல்
கறையிலா வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (59)

குணமிலேன் மொழிபா நயமில தெனினுங்
குறித்ததை யேற்றருள் செய்ய
இணர்மலி குழானிற் கேதகுஞ் சிலம்பி
யியற்று நூற் பந்தரு முவந்து
புணரருள் புரிந்தா னின்பதி யந்தப்
புராணநீ யோர்ந்தனை யன்றே
கணமலி முனிவர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (60)

கலியால் நிகழும் துயர் சம்புகேசுரத்தில் உள்ளாரைச்சாராது என்று அத்தலமகிமை கூறினர்,

59. நறை - நறுமணம்; நயம் - நீதி, இன்பம். நயனம் - கண். பொறை - பொறுமை. மகவு - புத்திரப்பேறு. புனல் - நீர், முறை - நீதி. மதி - சந்திரன். இவரது புத்தியில்லாத பாடல் மேற்கூறியவற்றைப் போன்று பயன்தராதென்பது குறிப்பு. ஒப்பு: 'சந்திரனில்லா வானம், தாமரையில்லாப் பொய்கை, மந்திரியில்லா வேந்தன்; மதகரியில்லாச் சேனை, சுந்தரப் புலவரில்லாத் தொல்சபை, சுதரில் வாழ்வு, தந்திகளில்லா வீணை, தனமிலா மங்கை போலாம்' (விவேகசிந்தாமணி).

60. சிலம்பி வாய்நூற்கொண்டு வகுத்த நூற்பந்தரையும் தவிர்க்காது பெருமான் ஏற்றனர். அதுபோன்று நயமின்றெனினும் தன் கவியை உகந்தேற்றல் தேவி கடன் என்கின்றார். இது அத்தலச் செய்தி. சிலந்தி அப்பு லிங்கத்தின் மீது தன் வாய் நூலால் பந்தர் அமைத்ததும், அதனை நாடோறும் தன் துதிக்கை

வரிவிழிக் குடைந்த மானையு நுதற்கு
மானுருப் பிறையையு மல்குற்
கிரிதரும் படவெவ் வரவையு மருங்குற்
கிணைதராத் துடியையுஞ் சுமந்தான்
துரிசறு வனப்பார் நின்னுறுப் பினுக்குத்
தோற்றறும் விசேடமென் றுணர்ந்தே
கரியகண் டத்தோ னருட்டிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (61)

பொறையரு ளடக்க மன்புப சாரம்
பொலியுமா சாரநல் வாய்மை
அறைதரு மின்ன குறையுளே னெனினு
மடிமையே நினக்கியா னுறுப்புக்
குறையுடை யாரு மக்களென் றெடுத்துக்
கூறுவ ருலகர்நீ யுணர்வாய்
கறையற விளங்கு மருட்டிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (62)

நீர் கொண்டு இறைவனை நீராட்டும் வேழம் கலைத்ததும், சிலம்பி வெகுண்டு அதன் மண்டையிற் புக இரண்டும் மரித்ததும், யானை கணநாதராக ஆயதும், சிலந்தி, கோச்செங்கட் சோழனுகப் பிறந்ததும் எல்லாம் திருவானைக்காப் புராணத்துட் காண்க. இணர் - பூங்கொத்து. குழால்; விளி. முனிவர் கணம் மலி என மாற்றுக.

61. வரி - செவ்வரி. உடைந்த - தோற்ற. மானுரு - ஒப்பாகாத. அல்குற்கு இரிதரும் என்க. மான், பிறை, அரவு, துடி என்ற இவைகளைப் பரமன் அணிந்ததற்கு ஓர் காரணம் கற்பித்தார், துடி - உடுக்கை. துரிசு - குற்றம். வனப்பு - அழகு. தோற்றும் - தோல்வியுற்றழியும். கரிய கண்டத்தோன் - பாற்கடலில் தோன்றிய விடமுண்டு கறுத்த நீலகண்டன். உணர்ந்தே சுமந்தான் என்க.

62. இங்குக் கூறிய நற்பண்புகளில் தான் ஒன்றும் இலாதவன் எனினும் அடிமை என்ற ஓர் எண்ணம் கொண்டு தன்னைக் காக்க வேண்டும் என்றும், உடலுறுப்புக்கள் குறையப்பெற்றவர்

உரைசெய்வெண் ணாவ னிழலுறை பெருமா
னேங்கருண் முறைசெலுத் தியகோன்
விரைசெய்பூங் கொன்றை யவனென நீயும்
விருப்பொடு செலுத்திடல் வேண்டும்
புரைசெயென் பாலே மற்றது செலுத்திற்
பொருப்பின்மே லிடுசுடர் போலாம்
கரைசெயா வளங்கண் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (63)

புண்ணிய வெள்ளை நாவலோ னாரம்
பூண்டவ னெனும்பெயர் புனைந்தான்
தண்ணிய குணத்து நீயுமென் பாட
றழுவுபு பூணுவை யாயின்
அண்ணிய பாடல் பூண்டவ ளெனுமோ
ரரும்பெயர் நினக்குமுண் டாமே
கண்ணிய வரங்க டருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (64)

எனினும், அவர்களும் மக்கள் எனப்படுவரன்றோ என்றும் வினவுகின்றார். கறை - களங்கம்.

63. ஒன்றுக்கும் பற்றாத கொன்றையையும் ஏற்றான் பெருமான். அதுபோன்று ஒன்றுக்கும் பற்றாத அன்பிலன் எனினும் என்பால் உன் கருணை காட்டுதல் முறை. அங்ஙனம் காட்டினால் அது குன்றின்மேலிட்ட விளக்கென ஒளி செய்யும் என்பது குறிப்பு. வெண்ணாவல் - தல விருக்ஷம். விரை - நறுமணம். புரை - குற்றம். கரை செயா - எல்லையற்ற.

64. உறந்தைச் சோழன் பொன்னி நதியில் நீராடுங்கால் நீரில் வீழ்ந்த முத்தாரம் பின்னர் சம்புநாதன் கண்டத்திற் பொலிந்ததனால் அப்பெருமான் ஆரம் பூண்டவன் எனப்பட்டான். ஆகவே, என்னுடைய பாமாலையையும் நீ விரும்பி ஏற்பின் நீயும் பாமாலை பூண்டவளாவாய் என்று நயம்பட வுரைக்கின்றார். (தேவா. தல. பக். 344, 7) காண்க. தண்ணிய - இனிய. தழுவுபு - தழுவி. அண்ணிய - தித்திக்கின்ற. 'அண்ணிக்கு மமுதூறும்'

தழைசெய்வெண் ணாவ னறுநிழ லுறைவான்
றனிமுத லவனொரு பாகத்
துழைசெயொள் விழியா யுறைகுவை நீமற்
றுன்னடி நிழலிலெஞ் ஞான்றும்
விழைசெயா னுறையப் புரிந்திடி னதனுன்
மிக்கபுண் ணியநினக் குண்டே
கழைசெய்பூங் கழனி பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (65)

பிரம்படி பட்டுங் கல்லடி யேற்றும்
பிறைபொரு வில்லடி கொண்டும்
நிரம்புற வருள்வா னெங்குவெண் ணாவ
னிழலுறை பவனடி யார்பா
லுரம்பயி லவன்போ னீயவ்வா றேற்றின்
புதவுந லல்லண்மெல் லியனீ
கரம்பறு கழனி மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (66)

(திவ்ய. கண்ணிநுண். 1). கண்ணிய அன்பர்கள் கருதிய அல்லது அவர்கட்கு வேண்டும் வரங்கள் இன்னவென்று நீ கருதிய என்றுமாம். 'வேண்டத் தக்கதறிவோய் நீ' 'என்னதோ விங்கதிகாரம்' என்ற திருவாசக வரிகளைக் காண்க.

65. இறைவன் பாகத்து நீ யுறைவாய். உன் திருவடி நிழலில் அடியேன் உறையுமாறு அருள் புரிக என வேண்டுகிறார். தழை செய் - தழைத்த. உழை செய் விழி - மான் போன்ற மருண்ட நோக்கம். செய் - உவம வாசகம். விழை செய் - விரும்புகின்ற. கழை - கரும்பு. மூங்கிலுமாம். கழனி - விளைவயல்.

66. இங்கு முறையே பிட்டுக்கு மண் சுமந்ததும், பாண்டியன் கரத்தாற் பிரம்படி பட்டதும், சாக்கிய நாயனர் கல்லடி பெற்றதும், பார்த்தனுடைய வில்லாலடியுண்டதும் குறிக்கப்பட்டன. விரிவு திருவிளையாடற்புராணத்தும் பெரிய புராணத்தும் காண்க. உரம் - வன்மை. கரம்பு - சாகுபடி செய்யாத நிலம். அனுதிக் கரம்பு, செய்காற் கரம்பு என்பன காண்க. உரம்பயில் அவன் - வலிமை

பற்பல ரறியப் பித்தனென் றெள்ளிப்
பனவபோ வென்றுளார் தமையும்
பொற்பலர் பெருமான் விடாமென வாண்டு
புரந்தன னங்ஙன மின்றி
வெற்பலர் மருந்தே துதித்துவா வென்னும்
வினையினேன் றனைவிட விதியென்
கற்பலர் நந்த வனத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (67)

தேவியோ டினிது வந்தருள் புரிந்தான்
சிவனடி யார்க்கென்ப தன்றி
ஆவிநேர் கொழுந னோடுவந் தாண்டா
ளம்மையென் பாரிலை யன்னே
மேவியச் சீர்த்தி நினக்கறு விதமென்
விளம்பிட வேண்டுநா யேற்குக்
காவியார் தடஞ்சூழ் தருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (68)

யிலே திளைப்போன். சிவபிரான் - உரம் பயில்பவன்; ஆகவே வலியமுறையில் அன்பு செய்தோரை ஆட்கொண்டான்; நீயோ மெல்லியல். 'வில்லாலடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன் கல்லாலெறியப் பிரம்பாலடிக்க' என்றது காண்க.

67. பித்தன் என்று இகழ்ந்தவர் சுந்தரமூர்த்திகள்; வரலாறு. பெரிய புராணம் தடுத்தாட்கொண்ட பகுதியிற் காண்க. எள்ளி - இகழ்ந்து. பனவ - பிராமணனே - விளி 'பனவ போ' என்றவர் சுந்தரர். பொற்பு - அழகு. வெற்பலர் - மருந்தே. மலைமகள் விளி. மருந்து - அமுதம் போல்பவள். துதித்து வா என்றும் - புகழ்ந்து அருள் புரிய வா என்று வேண்டும். கற்பு - முல்லை.

68. சிவபெருமான் எங்கு அருள் வழங்கச் சென்றிடினும் தேவியுடனே சென்று வழங்கினன் என்ப. தேவியாகிய நீ உன் கணவனுடன் சென்று அருள் வழங்கியதாகக் கூறுர். இஃது என்ன வியப்பு எனக் கூறும் முகத்தால், இறைவன் அருள் வடிவான சத்தியைக் கொண்டுதான் அன்பர்க்கு அருள் வழங்குவன்

அடியவர் குறிப்போர்ந் தாண்பனை காய்க்க
வாற்றெதிர் செல்லவே டென்பின்
பொடிமட வரலா கக்கராம் விழுங்கும்
பொருடரச் செய்தனன் பரமன்
கொடியனேன் குறிப்போர்ந் துன்னடிக் கன்பு
கொளப்புரி வதுமுனக் கரிதோ
கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (69)

அயனரி குலிச னமரருண் ணடுங்க
வடர்ந்தெழுங் கொடுவிடம் வாங்கி
நயனமூன் றுடையா னுண்டனன் முன்னே
நங்கைநின் பவளவா யமிர்தப்
பயனுணர்ந் தன்றோ வலனெனி னனைய
பரமனெவ் வாறுணத் துணிவான்
கயன்மலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (70)

என்ற நெறியைக் குறிக்கின்றார். 'அருளது சத்தியாகும்', 'சடை மருங்கி விளம்பிறையும் தனி விழிக்கும் திருநுதலும் இடை மருங்கில் உமையாளும்' (பெரிய பு. திருவாரூர்ச். 46) என்பது காண்க. தேவியுடன் சென்று அருள் புரிந்தது பெரிய புராணத்தில் பரக்கக் காணலாம்.

69. ஆண் பனையைப் பெண் பனையாக்கியது, வைகையில் இட்ட ஏடு நீர் எதிர் செல்லச் செய்தது, என்பு பூம்பாவை யாக்கியது என்ற மூன்றும் திருஞான சம்பந்தரின் அற்புதச் செயல்கள். முதலையுண்ட மகவை அழைத்தது சுந்தர மூர்த்தி நாயனர். இது அவிநாசியில் நிகழ்ந்தது. முதல் கூறிய மூன்றும் நிகழ்ந்த இடங்கள் திருவோத்தூர், திருவேரகம், திருமயிலை என்பர். கடிமலர் - நறுமணமலர்.

70. அயன் - பிரமன். குலிசன் - வஜ்ஜிராயுதம் ஏற்ற தேவேந்திரன். விடம் - திருப்பாற்கடல் கடையும் போது எழுந்தது. நயனம் மூன்று - சூரியன், சந்திரன், அக்கினி. இறைவன் அவ்

ஒளிமிகு சம்பு லிங்கநா யகர்போ
லுடையையா னுதல்விழி நீயும்
அளிமிகு மனையார் மாரனை யெரித்தார்
யாரைநீ யெரித்தனை யம்மா
விளிமிகு நாயேன் வினையினை யெரித்தா
லிரும்புக ழுவரினு நினக்காங்
களிமிகு மமரர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (71)

நெடுவலி கொடுமா மேருவிற் பிடித்தாய்
நீயஃ துணர்குவன் யானும்
அடுதிறற் சூலி பிடித்தன னென்பா
ரவனியுட் சிலர்கருத் தென்னோ
இடுகிடை நீயு மவனும்வே றல்லீ
ரென்பதை யுணர்ந்தனர் கொல்லோ
கடுவிழி மடவார் பயிறிருவானைக்
காவகி லாண்டநா யகியே. (72)

விடத்தை உண்ணத் துணிந்தது மரணத்தையும் மாற்றவல்ல உன் பவளம் போன்ற வாயமுதம் கொண்டன்றோ என்பது குறிப்பு. அமிர்தம் - மரணத்தைப் போக்குவது என்பது காரணக் குறி. கயல் மலர் - கெண்டை மீன்கள் பரந்த.

71. ‘இறைவற்குள்ளது போன்று இறைவிக்கும் நெற்றிக் கண் உண்டு எனினும் பெருமான் மன்மதனை எரித்தது போன்று தேவியாகிய நீ எரித்தாயில்லை. எனினும் அடியேன் வினையை நீ எடுத்தழித்தால் உருவோடு கூடிய ஒருவனை அழித்த சிவபிரான் செயலை விட அருவமாகிய வினையை ஒழிப்பது நினக்கு மிக்க பெருமையைத் தரும், என்று கூறுகின்றார். ஒளி மிகு சம்பு - ஒளி அவன் சொரூப இலக்கணம். விளிமிகு - அழைப்பொழியாத ‘இவனென்னை நாளும் அழைப்பொழியா னென்றெதிர்ப் படுமே’ (தேவாரம். தல. 1900, 2).

72. மேருவை வில்லாக்கிக் கையேற்றது நீ; (இவ்வாறு கூறியது அவர் தம் இடக்கையால் பிடித்தது குறித்து

அம்பலத் தாட வெடுத்ததா டுணையென்
றறைவனோர் கான்மலை யரையன்
வம்பலர் முன்றிற் றிருமணத் தம்மி
வைத்ததா டுணை யென்ப னோர்காற்
செம்பொரு டுணியா னென்றெனை யிகழேல்
தேர்ந்தொரு வழிநின்றே னன்னாய்
கம்பலர்த் தடஞ்சூழ் தருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (73)

எதிரறு பொதுவிற் குறட்பிணர் வெரிந்மே
லியைத்திட றகாதென வுணர்ந்து
முதிருணர் வுடைய பரன்மறைச் சிலம்பார்
மொய்வலத் தாணிறீஇ யிடத்தாள்

எனினும் சூலம் ஏந்தும் பெருமான்மீது அதனை ஏற்றிச் சொல்வர் அறிஞர். நீவிர் இருவரும் வேறுபட்டவரல்லர்; ஒருவரே என உணர்த்தற்குப்போலும் என்பது கருத்து. அவனி - பூமி. நெடு வலி - மிக்கவலி. கொடு - வளைந்த. அடுதிறல் - வினைத்தொகை. இடுகு இடை - சிறுத்த இடை. கடு விழி - விடம் பொருந்திய கண். 'நஞ்சினும் கொடிய நாட்டம் அமுதினும் நயந்து நோக்கி' (கம்ப. பால. பூக்கொய். 7) 'முனிவரையும் மாலுறுப்ப மகிழ்செய்வ மாண்பினஞ்சு மமுதமேபோல் குணத்த பொருகயற்கண்' (சீவக. 167).

73. மலையரையன் - இமவான். அம்மிமிதித்து அருந்ததி நோக்குதல் ஓர் திருமண நிகழ்ச்சி. கம்பு - சங்கு. வம்பு - நறு மணம். அம்பலத்து எடுத்ததாள் இறைவனின் இடக்கால்; அஃது அம்பிகையின் காலாம்; அம்மி மிதித்தது அவளின் வலக்கால். இருகால்களும் தேவியின் திருவடிகளே; இவ்வாறிருக்க 'செம் பொருள் துணியரன்; மாற்றிச் சொல்லி இடர்ப்படுகிறான்; என்ற குற்றம் இல்லை என்று கூறிய நயம் ஓர்க. கரவு - வஞ்சகம்.

74. பொது - சபை. பிணர் - சருச்சரை. வெரிந் - முதுகு. சிவபெருமான் வலக்கால் கொண்டு முயலகனை மிதித்தற்குக் காரணம் அருட்காலாகிய (அம்பிகையின் காலால்) இடக்காலால் கொடுமை செய்தலாகாது என்ற கருத்தினால் அமைந்திருக்க,

அதிர்வர வெடுத்தான் வழுதியவ் வருமை
யறிதரான் பிழைத்தனன் பொறுத்தாய்
கதிரருட் கழகே யதுதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (74)

பரவுவெண் ணுவ னீழலோ னிடத்தாள்
பற்றிய வென்முனங் குறுக
உரவுசெய் தண்ட தரனுள நடுங்கு
முதைத்ததத் தாளென வுன்னி
விரவுமப் பதநின் பதமன்றோ வதனை
மென்பத மென்பதென் விளம்பாய்
கரவுறுப் புலவர் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (75)

ஒருகருங் கேழ லுருவெடுத் திணையி
லுன்பதி யடிமலர் காண்பான்
பெருநில மகழ்ந்த மாயவ னினது
பிறங்குபே ராலயஞ் சூழ்ந்த

பாண்டியன் அவ்வருமை அறியாது வலக்கால் மாறி ஆடச் செய்தமை தவறுகும் என்று சமத்காரமாகக் கூறுகின்றார். மறையே திருவடிக்கண் சிலம்பு 'என்க. மொய் - வலிமை, அழகுமாம். நிறீஇ - நிறுத்தி செய்யுளிசை அளபெடை. வழுதி - பாண்டியன். அறிதருதல் - தரு துணைவினை. கதிர் அருள் - கதிர்க்கும் அருள் - வினைத்தொகை.

75. சிவபிரான் இடத்தாள் எமனை உதைத்ததாள். அதனை இறுகப் பற்றினேன் அடியேன். அதனால் என்பால் எமன் அணுகான் எனினும், அத்தாள் பெருமான் இடத்துறையும் நின் தாளன்றோ? அதனை மென் பதம் என்பது விந்தையே என்கின்றார். உரவு - வலிமை. தண்டதரன் - தண்டையேந்தும் எமன். 'தண்டாயுதமும் திரிசூலமும் விழத்தாக்கி' (கந்தரலங்.) கரவு - வஞ்சகம். மென்பத மென்பதன் என்ற இடத்து இணை யெதுகை காண்க.

76. கருங்கேழல் உருவெடுத்தவன் - திருமால். 'புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியாது' என்ற திருக்கோ

பொருவினீ றிட்டான் மதிலடி கண்டாற்
போதுமே புண்ணியக் கொழுந்தே
கருள்கடிந் தொளியின் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (76)

உயன்மறந் தடருந் திரிபுரஞ் சிதைப்பா
னொருவரை யெளிதினிற் குழைத்த
பயன்மதி முடித்த பாடல்சால் பெருமான்
பாழியந் தடநெடுந் தோள்கள்
வியன்முலைக் கோட்டாற் குழைத்தரு ளினக்கு
மெல்லிய லெனும்பெயர் தகுமோ
கயன்மலர்த் தடங்கண் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (77)

மையவாண் மகனெள் ளெச்சிலுண் டாற்கு
மகிழ்ந்தருள் செய்துநின் கொழுநன்
மெய்யவாஞ் சீர்த்தி படைத்தன னெனக்கு
விரும்பிநீ யருளுவை யாயின்

வைச் செய்யுள் காண்க. நீறிட்டான் மதில் - திருவானைக்காவில் இன்றுமுள்ள ஐந்தாவது சுற்றுகிய வீபூதிப்பிரகாரம்; சிவபிரான் அடியார் வேடம் பூண்டு எழுந்தருளி, மதில் கட்டுதற்கு மாக்களை ஏவி, அவரவர்கள் ஆற்றிய தொழிலுக்குக் கூலியாக விபூதி அளித்தனர் என்றும், அது பொன்னுக மாறியது என்றும் அத் தலபுராணம் கூறும். கருள் - இருட்டு, அஞ்ஞானம்.

77. திரிபுரம் சிதைக்க மேருவை வில்லாக வளைத்தவன் சிவ பெருமான். முப்புரத்தசுரர், தாரகாக்ஷன், கமலாக்ஷன் வித்யுன் மாலி என்ப. புரமெரித்த இறைவனது வலிய தோள்களையும் உன் தன இணைகள் குழைத்தனவெனின் உன்னை மெல்லியல் எனக் கூறுவது பொருந்துமா என்பது குறிப்பு. பயல்மதி - இளம்பிறை பைதல். பையல் என்பதன் திரிபு - 'பைதல் பார்ப்பு' காண்க. பாழி - வலிய. கோடு - சிகரம். குழைத்தல் - தளரச் செய்தல். (ஒப்பு) 75.

78. எச்சில் உண்டவர் சம்பு முனிவர். சிவபெருமான் உண்டுமிழ்ந்த நாவற் கனியின் விதையை உண்டு வெண்ணுவல் மரமான

ஐயபெண் மகளெள் ளெச்சிலுண் டானுக்
கருளினு னெனும்புகழ் நினக்காம்
கையர்வந் தணுகற் கருந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (78)

புனல்பயி றவளை முழங்கநின் கொழுநன்
புகழ்ப்பெய ருரைத்ததா வுணர்ந்து
மினல்பயில் கனகம் வீசினு னொருவன்
மெய்ம்மையே நின்பெய ருரைக்கு
முனல்பயில் குழாம்பு கேன்றெழேன் புகழேன்
உவந்திடே னெங்ஙன முய்வேன்
கனல்பயின் மணிமா மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (79)

வர். அவற்கருள் செய்தது திருவானைக்காப் புராணம். சம்பு முனி தவம்புரிபடலத்துக் காண்க. பெண் மகள் எள் எச்சில் உண்டது தேவிக்கு அமுது படைத்துப் பின்னர் உண்பது என்க. கையர் - வஞ்சகர்.

79. தவளை சிவநாமம் கூறியதாகப் பொன் அளித்தவன் வரகுணபாண்டியன் (ஒப்பு) முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் அளித்த பாரியும், பேகனும். மினல்பயில் - ஒளி பொருந்திய. கனகம் - பொன். தன்பாற் பல குறைபாடுகள் உளவாகலின் தவளை பெற்றபேறும் தனக்குக் கிட்டவில்லையே என வருந்துகின்றார். கனல் ஆகுபெயராக அதனையுடைய நீற்றினைக் குறித்து நின்றது. மணி - அழகிய; கனல்போன்று ஒளிவிடும் அழகிய மதில் எனினுமாம். தவளை முழக்கம் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை காண்க. 'தவளைப் புனலிற் றவளையரற்ற யீசன் றன்னை யேத்தினவென்று காசும் பொன்னும் கலந்து தூவியும்' உனல்பயில் - உன்னுவதைப் பயில்கின்ற அடியார் கூட்டம். (ஒப்பு.) திருவாச. திருச்சதகம். 14, 18, 22.

மாவியல் பெருமான் மான்பிறை சுமந்தேன்
வாமபா கத்தினி தமரு
நீவிளை யாடற் கென்பனம் பற்க
நிகழுமி திடைமரு தூரின்
மேவியோ ரரசில் விழுங்கிய தாதி
வெறுப்பன மறைப்பதற் கென்று
காவியங் கண்ணு யுணர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (80)

அண்டகோ டிகளென் றுரைத்திடுஞ் சிற்றி
லமைத்தமைத் தாடிடு வாய்நீ
துண்டவாண் மதியஞ் சூடிய சடிலச்
சுந்தர னழித்தழித் தாடும்
பிண்டநூ லென்றும் பேதைநீ யனையான்
பித்தனென் றுரைப்பது மெய்யே
கண்டவா மொழியார் பயிறிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (81)

---

80. இங்கு திருவிடைமருதூரில் வழிபடும் ஒருவன் உண்ட எள்ளின் விதையை உண்ட வரகுணனைக் குறிப்பதுபோலும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 28). இதில் அடங்கிய வரலாறு ஆராய்தற்குரியது.

81. தேவி சிற்றிலிழைத்து விளையாடுவது இங்குக் குறிக்கப் பட்டது. சிற்றிலிழைத்தல் பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங் களில் ஒன்றுதல் காண்க. இறைவி அமைத்தமைத்தாடும் இறைவன் அழித்தழித்தாடும் என்ற முரண் நயம் காண்க. (ஒப்பு.) 'காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி' (திருவாச.) துண்ட வாள் மதி - பிறைச்சந்திரன். சடிலச் சுந்தரன் - சடைமுடியனுன சிவபிரான். கண்டு அவாம் மொழியார் - கற்கண்டும் இனிப்பினல் விரும்பும் இன்சொல்லாள். அவாவும் - அவாம் எனத்தொக்கது. பிண்ட நூல் - அண்டத்தில் உள்ளது பிண்டத்து என்ற பழமொழி காண்க.

மகளென நினைந்து தாயென விளித்த
மலையிறை மனையறி யாமை
புகர றுபிரமன் முதற்பல வுயிர்க்கும்
பொருந்துதா யாமுனைக் கணேசன்
அகநகு முருகக் கடவுடா யென்று
நவிலறி யாமையை யேய்க்குங்
ககனமே லோங்கு மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (82)

இலங்கற முப்பத் திரண்டென வகுத்தாங்
கிகலற வவையெலாம் வளர்த்து
மலங்குயிர் பலவும் புரக்குநீ கொடியேன்
மாட்டருள் புரியினஃ தவற்றுள்
துலங்குமொன் றெடுசே ராதுகொ றனிப்பிற்
சொற்றிமுப் பத்துமூன் றென்றே
கலங்கலில் வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (83)

---

82. மலையிறைமனை - பர்வதராஜன் மனைவியான மேனை. கணேசன் முருகக் கடவுள்; உம்மைத்தொகை. ஏய்க்கும் - ஒக்கும். புகர் - குற்றம். ககனமேலோங்கும் மதில் - வானளாவி யுயர்ந்த மதில். அகில வுயிர்க்கும் தாயான நின்னைக் கணேசனுக்கும் முருகனுக்கும் தாயென்பது போன்று என்க.

83. இலங்கு அறம் - விளங்குகின்ற அறங்கள். இகல் - பகைமை. இருநாழி நெற்கொண்டு முப்பத்திரண்டறம் வளர்த்து எல்லாச் சீவராசிகளையும் புரப்பவள் தேவி. அஃது - தன்மாட்டருள்புரிதல். கொல், அசை. தான் தேவியின் அருள்பெறத் தகாத தன்மை யுணர்ந்து, தனக்குள் புகுதல் முப்பத்துமூன்றும் அறம் ஆகும் என்று நயம்பட உரைக்கின்றார் என்க. மலங்கும் - கலங்கும். சொற்றி - சொல்வாயாக.

இளைத்தடைந் தேனை யாடியென் றுனையா
 னிரந்திரந் தேத்தநீ யிரங்கி
வளைத்தபே ரருளா லாளுவ தனிலு
 மன்றநீ யேயருள் புரிந்தால்
முளைத்தசீர் பரவ விடமிலை கேட்டோ
 முகின்மழை வழங்கிடுந் தாயே
களைத்தடஞ் சிகரி சூழ்திரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (84)

பிழைபல வுடையே னுயினு மவற்றைப்
 பேதைநீ யென்பதற் கிணங்கக்
குழைமனத் தகற்றி யாளவே வேண்டுங்
 கூர்ந்தினி தாண்டிடா யென்னின்
மழைமலர்க் கூந்தற் கங்கையைப் புகழ்வேன்
 வைவரே நொந்தவர் தாயே
கழைமலி கழனி சூழ்திரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (85)

---

84. ஆள் ஆடி - ஆள்வாயாக. நான் மன்றுடிக் கேட்ட பின் ஆளுவதைவிட நீயே வலிந்து ஆட்கொள்ளுதல் நினக்கு அதிகம் பெருமை தரும் என்கின்றுர். மன்ற - நிச்சயமாக. முகில் மழை வழங்குவது ஒருவர் கேட்டுத்தானே? சிகரி - கோபுரம், குன்றும் ஆம். களைத்தடம் - அழகிய பெரிய, அழகிய குளங்களும் மதிலும் எனினுமாம்.

85. தேவி உனக்கு அறியாதவள் எனப் பொருள்படும் பேதை என்றும் பெயர் உண்டு. 'பேதைமை என்பது மாதர்க் கணிகலம்' காண்க. ஆகலின் என் குற்றங்கள் அனைத்தும் அறியா தொழிக. மழை மலர் கூந்தல் - மேகம் போன்று கறுத்து மல ரணிந்த கூந்தல். அடியேனை ஆட்கொள்ள மறுப்பின் உன் மாற்றுளான கங்கையைப் புகழ்வேன். 'நொந்தவர் என்னதான் செய்யார்' என்றபடி. கழை - கரும்பு ; மூங்கிலுமாம்.

சடைமிசை மாதை நோக்கியா ரெனினீ
சங்கர னீரென்பான் முகமுன்
இடைதெரி தரலென் னென்னினேக் குறுநின்
னெழின்முக முதனிழ லென்பன்
உடையநா யகிநீ மறுத்திடிற் பிறரா
லுணரென்பா னுணரவல் லவர்யார்
கடையுற லொழிந்த வளத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (86)

எனக்கருள் செயினின் கொழுநனைப் புகழ்வே
னிமயநின் றந்தையைப் புகழ்வேன்
மனக்கினி தாநின் மைந்தரைப் புகழ்வேன்
மலரினின் றோழியர்ப் புகழ்வேன்
நினக்கினி யவரா மடியரைப் புகழ்வே
னின்னையும் புகழுவேன் றாயே
கனக்கடி மதில்சூழ் தருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (87)

---

86. சடைக்கண் உள்ள கங்கையை நோக்கி நீ வினவினால், சங்கரன் 'நீர்' என்பான்; 'அந்நீருக்கு முகம் முதலிய உறுப்புக்கள் உண்டோ? எனின்' அவன், 'உன் முகத்தின் நிழலே' என்பன். அதனையும் நீ மறுத்தால் பிறர்பாற் கேட்டருளத்தகும் என்பான் என்று நகைச்சுவைபடக் கூறினர் என்க. 'ஐயநின் சென்னிமிசையுறைகின்ற மடமங்கையாரென்னவுமை வினவவும்' என்ற சிவப்பிரகாசர் பாடலை அடியொற்றியது இச் செய்யுள். உணர வல்லவர் யார்? 'உணர்ந்தார்க்குணர் வரியோன்' (திருக்கோ. 9).

87. மலரின் நின் தோழியர் - இலக்குமியும், கலைமகளும். கனக்கடிமதில்; கனம்; பருமை; வன்மை, அகலம், வட்டம், சீர்மை, பொன் என்ற பல பொருள் கொண்ட சொல். கடி - காவல்.

பூவண நகரிற் பொன்னனை யாளிற்
புகுந்தனன் முன்புகா மாரி
தூவண வன்பி னைந்திணை யெனுநூல்
சொற்றதை விளக்கின னென்னின்
மாவணத் தளிர்நேர் மேனியா யுலக
மாதுகொ ளீவிடை யிதற்கென்
காவண நிறைவீ தித்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (88)

பேயொடு நடிக்கும் பித்தனே யென்றோ
பெருங்கதி யிலிபிவ னென்றோ
தாயொடு தந்தை யில்லவ னென்றோ
தம்பிரா னொருதிரு மேனி
நீயொரு பாதி நின்முனோர் பாதி
நிலவுறக் கொண்டது நன்றே
காயொரு வாத்தென் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (89)

---

88. காம அரி - மன்மதனை அழித்தவன்; சிவபிரான். அனையாள் இல் எனப்பிரிக்க. பாண்டி நாட்டுத் தலங்களுள் ஒன்றுன திருப்பூவணத்துப் பொன்னனையாள் என்ற உருத்திர கணிகைக்கு அருள்புரிந்து அவளை இறைவன் அணைந்த வரலாறு திருப்பூவண நாதருலா முதலியவற்றில் காணலாம். 'அன்பினைந்திணை' எனத் தொடங்கும் அறுபது சூத்திரங்களைத் தன் அகத்துக்கொண்ட இறையனுர் அகப்பொருள் உரை இங்குக் குறிக்கப்பட்டது. மாந்தளிர், தேவி மேனிக்குவமை. அங்ஙனம் இறைவன் அருள்பெற்ற பொன்னனையாள் நின்னினும் வேறல்லள். ஆகவே அவள் நில வுலகப்பெண் ஆகாள். காவணம் - பந்தல்.

89. பித்தனென்று கருதிப்போலும் சிவபிரான் மேனியின் ஒரு பகுதியை உமையும், மற்றொரு பகுதியை அவள் முன்றோன்றலான திருமாலும் பற்றிக்கொண்டது என்கின்றார். 'கோயிற் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை, தாயுமிலி தந்தையிலி (திருவாச. 257) என்றது காண்க. 'ஒருபாதி மால்கொள மற்றொரு பாதி யுமையவள் கொண் டிருபாதியாலும் இறந்தான்

மோகினி யுருக்கொண் டொருதரம் புணர்நின்
முன்னவன் றனக்குமோர் பாதி
ஏகலி லெழினின் றனக்குமோர் பாதி
யெம்பிரான் மேனியி லென்றால்
ஆகிய நீயே யவனெனத் தெரிந்தே
னல்லையென் றுற்பொறுப் பாயோ
காகனஞ் சுமக்கும் வளர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (90)

பல்லுல கீன்ற நின்றிரு வுதரப்
பாலுள தென்னுநின் னிடைநே
ரொல்லுமா றிலதா யினுமொரு பக்க
மொத்தலிற் சிருட்டியை யாற்றும்
வெல்லுநா யகன்கைத் துடியெனி னின்றன்
மெல்வயிற் றிற்கது புகழோ
கல்லுமா மலத்தர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (91)

புராரி' (தனிப்பா). காய் ஒருவா - காய்கள் நீங்கப் பெறுத. தென் - தென்னை. இச் செய்யுளிற்கண்ட கருத்து அடுத்த செய்யுளால் விளங்குவது காண்க.

90. நின் முன்னவன் - திருமால். இறைவன் திருமேனியில் மோகினி உருக்கொண்ட திருமால் ஓர் பாதி கொண்டான், நீயொரு பாதி கொண்டாய். இதனல் இறைவர்க்கும் இறைவிக்கும் வேற்றுமையின்மை நிரூபிக்கப்பெற்றது என்கின்றார். ஏகல் இல் எழில் - அழியா அழகு. கா - சோலைகள். கனம் - மேகம்.

91. உதரம் - வயிறு. பால் - பக்கம். துடிபோன்ற இடையென்பர். ஆயினும் துடி உன்னிடைக் கீடாகாது. இருப்பினும் சிவபெருமான் திருக்கரத்திலுள்ள துடியின் சிருஷ்டியைச் செய்யும் இயல்புபற்றி அஃது ஒருவாறு இணையாகக் கூறலாம் என்றனர். 'தோற்றம் துடியதனில்' என்பது காண்க. கல்லும் மாமலத்தர் - மூமலத்தை அகழ்வோர்.

வண்படு கருப்புச் சிலைகொடு நெடிய
வலிபடு மேருவிற் கொண்ட
தண்படு மதியஞ் சூடியைப் பொருது
சயம்படு நகைபுரிந் துவப்பாய்
ஒண்படு வலர்க்குப் பசும்புல்வன் படையென்
றுரைப்பதை விளக்கினை தாயே
கண்படு மனச்செய் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (92)

தேவிநின் னிடைதோ ளொத்திடு குணத்தாற்
சிதம்பர தலத்தும்வேய் வனத்தும்
மேவிய நகைமுத் தணிமுலை யொக்கும்
விதத்தினுற் றிருமுல்லை வாயில்
பாவிய கயிலை யிடத்தும்வீற் றிருப்பன்
பரன்றலை மதியனே யன்றோ
காவியன் ககன முறுந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (93)

---

92. மேருமலையை வில்லாக்கிய சிவபெருமானை நீ உன் கைக் கரும்பு வில்லைக்கொண்டு வென்று நகையாடுவாய். இதனுல் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற மூதுரையை விளக்கினை யென்பது. கருப்புச்சிலை - உமையவளின் கரும்புவில் போன்ற புருவமெனினுமாம். அன்னம் கண்படும் செய் என்க. கண் படல் - உறங்குதல்.

93. சிவபெருமான் சிதம்பரம், திருநெல்வேலி, திருமுல்லை வாயில் என்ற தலங்களிற் கோயில் கொண்டமை; இவை முறையே பிராட்டியின் இடை, தோள், பற்கள், முலை என்றவற்றை ஒக்கும் என்று கருதி என்கின்ருர். இடை, சூனியமாய், வெளியாயிருக்கும் தன்மை கூறப்பெற்றது. 'இல்லையுண்டென்ன நின்ற இடையா தலின் இதனைக் குறித்தார். வேய் வனம் - வேணு வனம் என்ற நெல்லையம்பதி; வேய், தோளுக்கு உவமை. நகைமுத்து, முல்லைக் கும், தனம் மலைக்கும் ஒப்பு. இவற்ருல், பரமன் எழுந்தருளிய நான்கு தலங்கள் தேவிக்கு உவமைத் தொடர்புடைமை கூறப் பெற்றது. பாவிய - பரந்த. தலைமதியன் - முதற்றரமான புத்தி

சுவைபடு கனிசெய் பனசநெட் டரம்பை
சூதமா மலகம்வெண் ணாவல்
இவைமுதற் பலவான் றருநிழ லுறைவா
னினியநின் மொழிச்சுவை யவாவி
நவைபடு கொடிய வச்சிர வனமு
நயந்தனன் பித்தனு தலினுற்
கவைபடு சூலி யெழிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (94)

இறையவன் வாமத் துறையுநீ தொழில்செ
யிமையவர் தருப்பணங் காட்ட
மறைவின்மற் றதனை நோக்கியவ் விறைவன்
வலப்புறத் தொருமடக் கொடிநன்
குறைவதென் னெனமற் றவனொடு பிணங்கே
லுற்றுநோக் கிடிற்பிழை யில்லான்
கறைமலி களத்தன் வளத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (95)

யுடையவன். சென்னியில் மதியுடையவன் என இரு பொருள் படும். கா - சோலை. வியன்ககனம் உறும் - விண்ணையளாவிடும். (ஒப்பு.) *90*.

94. இங்குக் கூறியன பல தல விருக்ஷங்கள். வயலூர், குற்றாலம், கதலிவனம், காஞ்சி, திருவானைக்கா முதலிய திருப்பதிகள். பனசம் - பலா. நெடு அரம்பை - நீண்டவாழை. ரம்பா என்ற வடசொல் அகரம் பெற்று வந்தது. சூதம் - மாமரம். ஆமலகம் - நெல்லி. நவை - குற்றம். கவைபடுசூலி - மூன்று கவடாக உள்ள சூலப்படை. வச்சிரவனம் - ஓர் தலம்.

95. தேவர்கள் உன் முன்னர்க் காட்டும் கண்ணாடியில் உன் உருவம் மாறித் தென்பட, அதனைப் பிறிதொரு மகள் வலப்புறம் உறைவதாக எண்ணுதல் ஒழிக என்றபடி. தருப்பணம் - கண்ணாடி. வாமம் - இடதுபுறம். பிணங்கேல் - மாறு கொள்ளாதே. இதுபோன்ற இனிய கற்பனைகளைத் திருவிளையாடற் புராணத்துத் தருமிக்குப் பொற்கிழியளித்த படலத்துட் காண்க. கறை - விடம்.

கொடியது பிறத்த லதனினு மம்ம
கொடியதே யிறத்தலிவ் விரண்டுந்
தடிதர நினைந்தேன் றந்தைதா யில்லான்
றறுகண்வெங் கூற்றுதைத் தாற்குன்
அடியனென் றுணர்த்தி யருள்விலக் குவையேல்
அகிலமீ தொருகதி யுண்டோ
கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (96)

தடியுண லென்றும் வனசரர் பெருமான்
றருதடி மிசைந்தன ளெழிக
மிடியிடை யவர்மா லென்றுநிற் களித்தான்
மேனியிற் பாதியா தலினுற்
படிவிதி விலக்கி லான்பர னென்னைப்
பற்றியா டற்கவை குறியான்
கடிதரா துணர்த்து நீதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (97)

களம் - கண்டம். கறைமலி களத்தன் - நீலகண்டன். உற்று நோக்கிடில் என்றது சமத்காரம்.

96. பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம். ஆதலின் அதனைப் போக்க நினைந்ததாகவும், அதன் பொருட்டு அருள்புரியுமாறு பெருமானுக்குத் தன்னை அறிவுறுத்தல் வேண்டும் என்றும் கூறுகின்றார். 'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கென்கடவேன்.' (திருவாச. 16) என்றது காண்க. தடிதர - நீக்க. அருள் விலக்குவையேல் - அருள் செய்யாதிருப்பாயாகில். கடிமலர் - நறுமண மலர்கள்.

97. வனசரர் பெருமான் - வேடர் தலைவனான கண்ணப்பர்; அவர் அளித்த ஊனை நுகர்ந்தவன் பெருமான். சிவபெருமான் விதிவிலக்குகட்கு உட்படாதவன்; கண்ணப்பன் உதவிய ஊனைத் தின்றான்; நினக்கு மேனியிற் பாதியளித்தான். அவற்றைப்போல, நீ உணர்த்தின் ஆளத்தகாத என்னையும் அவன் ஆள்தற்கு என் தகுதியைக் கருதான் என்று நயம்பட உணர்த்தி

வரக்கருங் கொண்மூ மழைபொழி யாதேன்
மண்பயி ருயும்வகை யுண்டோ
திரக்கடுங் கவலை சிதைதரப் பல்காற்
செய்யும்விண் ணப்பம்நீ யுணர்ந்தும்
இரக்கமில் லவள்போ லிருத்தியேற் கருணை
யெங்கினி யிருப்பது தாயே
கரக்கரும் வளங்கண் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (98)

மாயவ னுயோர் பாதியில் லவளாய்
மற்றொர்பா தியுங்கவர்ந் தனையால்
நாயகன் மேனி யெனினவன் வடிவ
நாடொறு மறைந்ததா யிருக்கச்
சேயமண் சத்தி மயமென தந்தோ
சிவமய மென்பதென் னுரையாய்
காயமீ தெழுந்த மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (99)

யது காண்க. மிடி இடை - நல்கூரும் இடை. அதன் மெலிவு குறித்தது. நல்கூர்ந்தார்க்கில்லை சுற்றம் என்று நுண்ணு சுப்புநைய (சீவக.) அண்மைவிளி. கடிதரா - தரா துணைவினை. கடிதல் - வெகுளல்.

98. வரம் - மேன்மையான. கருங்கொண்மூ - கரிய மேகம். கொண்மூ - நீரைக்கொள்வது என்பது காரணக்குறி. 'வானின்றமையாதுலகு' சிதைதர - அழிய. திரக்கடும் கவலை - நிலைபெற்ற கடுமையான கவலை. திரம் - ஸ்திரம். கரக்க - ஒளிக்க.

99. பார்ப்பதியே திருமால் என்று கொள்கையைப் பின்பற்றி இவ்வாறு கூறினர். 'அரியலாற்றேவியில்லையையனையாறனுர்க்கே' (தேவா. தல. 289, 5) என்றது காண்க. இறைவன் திருமேனியின் இருபாதிகளும் உனதாகவிருக்க இறைவனைச் சத்திமயம் என்னுது சிவமயம் என்பதென் என நயம்பட வினவுகின்றுர். 'ஒருபாதி மால்கொள மற்றொருபாதி யுமையவள் கொண்டிருபாதியாலுமிறந்தான் புராரி (தனிப்பா.) என்றது காண்க. காயம் - ஆகாயம். விண் திண்டி யெழுந்தமதில். (ஒப்பு.) 90, 93.

பணிபடு நின்றாட் பங்கயம் பொங்கு
பனிவரை யகநக நிகழும்
துனிபடு பொழுது பரன்முடி மதியந்
துண்ணெனத் தாக்குநீர் வாவி
நணிபடு முட்டாட் பங்கயம் பெறுமோ
நவின்றன விணையிலென் றுணர்ந்தேன்
கனிபடு பொழில்விண் கமழ்திரு வானைக்
காவகி லாண்ட நாயகியே. (100)

திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை உரைக்குறிப்பு முற்றும்.

ஸ்ரீ அகிலாண்ட நாயகி திருவடிகளே சரணம்.

---

100. பனிவரை அகம் நகப்பொங்கும் உன் திருவடித்தாமரை. அவனுடன் நீ ஊடும்போது சிவபிரான் முடிக்கண் அணிந்த சந்திரன் திடுக்கிட்டஞ்சுமாறு மோதும். எனின் முள்ளோடுகூடிய தண்டினையுடைய பங்கயம் உன் திருவடிக்கு இணையாகக்கூடுமா? முட்டாள் பங்கயம் - சிலேடைப்பொருளில் முள்ளையுடையதாள் என்றும் முட்டாள் (அறிவிலி) என்றும் பொருள்படுதல் காண்க.

திருவானைக்கா அகிலாண்டநாயகி மாலை

செய்யுள் முதற்குறிப்பகராதி

அங்கையேங் ... 41
அடியவர் ... 69
அடியனேன் ... 4
அண்டகோ ... 81
அம்பலத் ... 73
அயனரி ... 70
அரும்புமேர் ... 54
அலையடி ... 18
அழுமழ ... 29
அளவறு ... 7

இடையரு வன்பின் ... 23
இடையரு வன்பு ... 30
இருவினைச் ... 19
இலங்கற ... 83
இளைத்தடைங் ... 84
இறையவன் ... 95

உயன்மறங் ... 77
உரைசெய்வெண் ... 63
உலகிடை ... 28

எடுப்பது ... 20
எண்ணருங் ... 26
எதிர்மலர் ... 32
எதிரறு ... 74
எனக்கருள் ... 87

ஒட்பினின் ... 42
ஒருகருங் ... 76
ஒளிமிகு ... 71

ஓதுறு ... 43

குடகட ... 48
குணமிலேன் ... 60
குற்றியை ... 15

கொடியது ... 96
கொடியவ ... 12

கோவண ... 44

சடைமிசை ... 86
சடையெனும் ... 36

சிலம்பகத் ... 55
சிறுபிறைக் ... 31

சுவைபடு ... 94

தடியுண ... 97
தருமமென் ... 51
தவவலி ... 33
தழைசெய்வெண் ... 65

தாயினைக் ... 14
தாவருஞ் ... 13

திருந்துறு ... 46
திருவளர் க[illegible]ாழ்த்து

தென்னவன் ... 53

தேவிநின் ... 93
தேவியோ ... 68

தொண்டவாய் ... 22

நந்திய ... 40
நறையிலா ... 59

நினையுணர் ... 57

நீயெனப் ... 34
நீவினை ... 52

நெடுவலி ... 72

பண்டுநீ ... 6
பரவுநங் ... 35
பரவுவெண் ... 75
பரவுறு ... 37
பரிதிவந் ... 38
பல்லுல ... 91
பற்பல ... 67
பணிபடு ... 100

பாவிநீ ... 5

பிரம்படி ... 66
பிழைபல ... 85

புண்ணிய ... 64
புனல்பயி ... 79

பூமலி ... 1
பூவண ... 88

பெரியவர்க் ... 56
பெரும்புக ... 8
பெருவழக் ... 49
பெருவள ... 17

பேயொடு ... 89

பொலிதரப் ... 58
பொறியரி ... 45

பொறையரு ... 62

மகளென ... 82
மறைபல ... 24
மறைமுதல் ... 47
மணிதொறு ... 25

மாயவ ... 99
மாவியல் ... 80

முடிமிசை ... 16
முதுபுக ... 50
முழுவதுங் ... 27
முற்றவம் ... 11

மையவாண் ... 7

மோகினி ... 90

யானென ... 9

வடதிசை ... 2
வண்படு ... 92
வரக்கருங் ... 98
வரிவிழிக் ... 61
வழிபடு ... 11

விரும்புநின் ... 39
விழியிடங் ... 10
விழிவிருந் ... 3